எனது ஊர்

# காரைநகர்

www.karaiNEWS.com


கனடாவில் இருந்து வெளியாகும் காரைநகர் செய்தி சஞ்சிகை. இலவசம். தொலைபேசி: 416 821 8390 இதழ் 24


















05.01.2020 அன்று 'காரைநகர் சேவையாளர்'
கௌரவம் பெறும் சேவையாளர்கள்.
எனது ஊர் காரைநகர்' www.karainews.com
விழா அனுசரணை Dr.வி..விஜயரத்தினம் மற்றும்
திரு.பாலசுப்பிரமணியம் மகாதேவன்

# எனது ஊர் காரை நகர்

www.karaiNEWS.com

காரை மண் கல்வியாளர்களினதும் சேவையாளர்களினதும் எதிர்கால சிந்தனை பற்றிய நடைமுறை செயற்பாடுகளினால் மட்டுமே பெரும் வளர்ச்சி கண்டு வருகின்றது. இடம் பெயர்ந்த நாடுகளில் இருந்தும் தமது தாய் மண்ணை வளப்படுத்த தம்மாலான உதவிகளை செய்து வரும் காரை மண் பற்றாளர்கள் சிறு தொகையினரே. அந்த வகையில் காரைநகர் பாடசாலைகளின் வளர்ச்சிகளிற்கும் காரைநகர் அபிவிருத்தி தொடர்பான வளர்ச்சிகளிற்கும் என்றும் எப்போதும் இல்லையென்னாது தமது உதவிகளை அள்ளி வளங்கி வருபவர்களில் முதன்மையானவர்களில் வைத்திய கலாநிதி வி.விஜயரத்தினம் அவர்களும் திரு.பாலசுப்பிரமணியம் மகாதேவன் அவர்களும் என்பதில் மிகையேதும் இல்லை.

இவர்களது முழுமையான அனுசரணை மூலமாக 'எனது ஊர் காரைநகர்" சஞ்சிகையும் www.karainews.com இணையத்தளமும் காரைநகர் சேவையாளர்களை கௌரவிப்பதில் பெருமையும் பேருவகையும் கொள்கின்றது.









# கனடாவில் இருந்து வெளியாகும் 'எனது ஊர் காரைநகர்' சஞ்சிகை மற்றும் www.karainews.com இணையத்தளம் சார்பில் காரைநகர் சேவையாளர்கள் கௌரவிப்பு!

காரை மண் போருக்கு பின்னர் மீண்டும் துரிதகதியில் சகஜநிலை பெறவும், முன்னேற்றம் பெறுவதற்கும் கல்வி, சேவை, ஊர் பணி என்பவற்றில் தமது அன்றாட கடமைகளிற்கும் தமது தேவைகளிற்கும் மேலாக ஒருபடி மேலே சென்று மக்களிற்காகவும் சேவை புரிந்த சேவையாளர்களால் மட்டுமே காரை மண் இன்று இவ்வளவு தூரம் துரித வளர்ச்சிபெற்று வந்துள்ளது.

அதனை கருத்தில் கொண்டு முதற்கட்டமாக 'எனது ஊர் காரைநகர் ' மற்றும் www.karainews.com சேவையாளர்களை இனம் கண்டு கௌரவிக்க 2017ம் ஆண்டு திட்டமிட்டது. 1990ம் ஆண்டுகளில் இருந்து பொதுப்பணியிலும் சிரமதானத்திலும் ஈடுபடும் எண்ணமும் செயலும் மிகமிக குறைவடைந்து வந்துள்ளதுடன், தமது கடமைகளிற்கும் மேலாக பொதுப்பணியில் ஈடுபட்டு வருபவர்கள் மீது மேலும் பல அழுத்தங்களை கொடுத்து அவர்களையும் பொதுப்பணியில் இருந்து வெளியேற்றும் செயற்பாடுகளே அதிகரித்து வருகின்றன. ஆனாலும் தன்னலமற்ற வகையில் ஊர் மக்களின் நலன்களை மட்டும் கருத்தில் கொண்டு சேவையாற்றுபவர்களை கௌரவிப்பதன் மூலமே மேலும் பல சேவையாளர்களை உருவாக்கவும் மீண்டும் ஊர்ப்பணி சிரமதானம் என்பவற்றில் தன்னலமற்ற வகையில் மீண்டும் அடுத்த சந்ததியினரை உருவாக்க முடியும் என்பதனை நோக்காகக் கொண்டு இந்த சேவையாளர்கள் கௌரவிப்பினை 'எனது ஊர் காரைநகர்' www.karainews.com திட்டமிட்டு செயற்படுத்துகின்றது. முதற்கட்டமாக தாயகத்தில் வாழும் 20 சேவையாளர்களை 2017.12.31 அன்று கௌரவித்துள்ளது.

மேற்கொண்டு தொடர்ந்து 2019ம் ஆண்டு கௌரவம் வழங்கி கௌரவிக்க 15 காரைநகர் சேவையாளர்களை காரைநகர் மக்களும் வெளிநாடுகளில் இடம் பெயர்ந்து வாழும் காரைநகர் மக்களும் www.karainews.com ஊடாக அறியத்தந்துள்ளார்கள். இவர்கள் 05.01.2020 அன்று காரைநகரில் நடைபெறுகின்ற விழாவின் போது பொற்கிளி வழங்கி கௌரவிக்கப்படுகின்றார்கள்.

மண்ணிற்காகவும் மக்களிற்காகவும் தன்னலமற்ற வகையில் பணி புரிபவர்களை வாழும் போதே வாழ்த்துவோம். 2019ம் ஆண்டுக்கான 'காரைநகர் சேவையாளர்' கௌரவமும் பொற்கிளியும் வழங்கி கௌரவிக்கப்படவுள்ள 10 காரைநகர் சேவையாளர்கள் விபரம் வருமாறு:

1. **சிவஸ்ரீ நா.ஞானசம்பந்தகுருக்கள்** - 1991 - 1996 வரையான ஈழத்து சிதம்பர சிவப்பணி
2. **திரு.வே.செல்வநாயகம்** - ஈழத்து சிதம்பரம் ஐயனார், சிவன் இராஜகோபுர திருப்பணி
3. **திரு.ந.பாக்கியராஜா** - ஈழத்து சிதம்பரம் திருப்பணி
4. **திரு.க.சோமசேகரம்** - வியாவில் ஐயனார் தேவஸ்தானம் ஊடான சமய சமூக பணி
5. **சிவஸ்ரீ வி.ஈஸ்வரகுருக்கள்** - சிவப்பணி
6. **திரு.க.தில்லையம்பலம்** - கல்வி மற்றும் சமய சமூக பணி
7. **திரு.சண்முகம் சிவஞானம்** - சமய மற்றும் கலைப்பணி
8. **திரு.சபாரத்தினம் மனோகரன்** - களபூமி பிரதேச வளர்ச்சியின் ஈடுபாட்டாளர்
9. **திருமதி சூரியா சிவரூபன்** - காரை மாணவர்களிற்கான கல்விப்பணி
10. **திரு.சங்கரப்பிள்ளை குகராஜா(குகன்)** - சிரமதானம், சமுதாய அக்கறை, இளம் விவசாயி

இவர்களுடன் காரை மண்ணின் சேவையாளர்களாக பணியாற்றி காலத்தால் மறக்கவும் மறைக்கவும் முடியாத தன்னலமற்ற சேவையாளர்களையும் அவர்தம் பணிக்களிற்காக கௌரவிப்பதில் பெருமை கொள்கின்றது 'எனது ஊர் காரைநகர்' சஞ்சிகையும் www.karainews.com இணையத்தளமும்.

1. அமரர் சு.முருகேசு - ஈழத்து சிதம்பரம் ஐயனார், சிவன் இராஜகோபுர திருப்பணி
2. அமரர் வே.சிவசுப்பிரமணியம்(10.40 மணியம்) ஈழத்து சிதம்பரம் ஐயனார், சிவன் இராஜகோபுர திருப்பணி.
3. அமரர்.அ.சி.சிவலிங்கம் - மணிவாசகர் சபை மற்றும் ஐயனார் சிவன் இராஜகோபுர திருப்பணி
4. அமரர் ஜெ.தில்லையம்பலவாணர் - காரைநகர் அபிவிருத்தி சபை
5. அமரர் சபாபதி சபாரத்தினம் - பிரித்தானியா காரை நலன்புரிச் சங்கம்












திருமதி சூரியா சிவரூபன் அவர்கள் காரைநகர் பாடசாலை மாணவர்களின் கல்வி தேவையறிந்து பலவிதமான உதவி-களைப் பெற்று வழங்குவதுடன் கற்றல் கற்பித்தல் தேவைகளை கண்டறிந்து தெரியப்படுத்தி வருவதுடன் அதற்குரிய செயற்பாடுகளிலும் தொடர்ந்து ஈடுபாட்டுடன் செயற்பட்டு வருகின்றார். திருமதி சூரியா சிவரூபன் அவர்களுக்கு 'எனது ஊர் காரைநகர்' www.karainews.com 'காரைநகர் சேவையாளர் கௌரவம் வழங்குவதில் பெருமையடைகின்றது.

காரைநகர் களபூமி பிரதேச வளர்ச்சியிலும் கல்வி துறையிலும் ஈடுபாட்டுடனும் அக்கறையுடனும் செயற்பட்டுவரும் செங்குந்தா பாடசாலையின் முன்னாள் உபஅதிபரும் புத்தூர் சோமாஸ்கந்த கல்லூரியின் ஆசிரியராக திகழும் திரு.சபாரத்தினம் மனோகரன் அவர்களிற்கு 'காரைநகர் சேவையாளர்' கௌரவம் வழங்குவதில் பெருமை கொள்கின்றது 'எனது ஊர் காரைநகர்' www.karainews.com









திரு.சங்கரப்பிள்ளை குகன் அவர்கள் களபூமி பிரதேச அபிவிருத்தியில் களத்தில் நின்று செயற்பட்டு வருவதுடன் பலவித சிரமதானப்பணிகளையும் முன்னின்று ஆர்வத்துடன் செயற்படுத்தி வருபவர். தன்னலமற்ற வகையில் செயற்படும் திரு.குகன் அவர்களிற்கு 'காரைநகர் சேவையாளர்' கௌரவம் வழங்குவதில் பெருமையடைகின்றது 'எனது ஊர் காரை-நகர்' மற்றும் www.karainews.com

**2017 இல் 'எனது ஊர் காரைநகர்' மற்றும் www.karainews.com சார்பாக சேவையாளர் கௌரவம் வழங்கி கௌரவிக்கப்பட்டவர்கள் வருமாறு:**

1. மருத்துவர் சுப்பிரமணியம் நடராசா
2. வே.முருகமூர்த்தி
3. பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை
4. பு.ஸ்ரீவிக்கினேஸ்வரன் (முன்னாள் காரை கோட்ட கல்வி அதிகாரி)
5. K.M.செல்வரத்தினம் (KMS)
6. த.ஜெயசீலன் (முன்னாள் காரைநகர் பிரதேச செயலர்)
7. வே.சபாலிங்கம்
8. இ.திருப்புகழூர்சிங்கம்
9. இ.இராசதுரை
10. திருமதி வாசுகி தவபாலன்
11. இ.சிறிதரன்
12. திரு.திருச்செல்வம் தவரட்ணம்
13. பண்டிதை செல்வி யோகலட்சுமி சோமசுந்தரம்
14. கை.நாகராசா
15. திரு.து.நாகேந்திரம்
16. ந.கிருஷ்ணபவன்
17. திரு.எஸ்.கே.சதாசிவம்
18. திருமதி நடராசா இராசமலர்
19. செல்வி வே.புஸ்பராணி
20. திரு.நாகலிங்கம் பாலகிருஸ்ணன்

## சைவம் தளைத்தோங்க சமூக பணியுடன் மனிதாபிமான பணிகளில் கடந்த 25 ஆண்டுகளாக ஈடுபட்டுவரும் வியாவில் ஐயனார் கோயில் அறங்காவலர் திரு.க.சோமசேகரம்(J.P) அவர்கள் 'காரைநகர் சேவையாளர் கௌரவம் பெறுகின்றார்



குளக்கோட்டு மன்னனால் கட்டப்பட்ட கோயில் என காரைநகர் வரலாற்றில் குறிப்பிடப்படும் முதன்மை கோயிலாக விளங்கி வரும் வியாவில் ஐயனார் தேவஸ்தானத்தில் 1987ம் ஆண்டு முதல் அறங்காவலராக பொறுப்பேற்று கோயில் நிர்வாகத்தினை செயற்படுத்தி வருகின்றார் திரு.க.சோமசேகரம் அவர்கள்.

வியாவில் ஐயனார் கோயில் நிர்வாக பணிகளுடன் கல்வி, சமயம், சமூகம், மனிதாபிமானம் சார்ந்து பல்வேறுபட்ட பணிகளை செயற்படுத்துவதிலும் சமூக அக்கறையுடன் செயற்பட்டு சைவத்தின் வளர்ச்சிக்காக அர்ப்பணிப்புடனும் அன்புடனும் வாழ்ந்து வருபவர் திரு.க.சோமசேக ரம் அவர்கள். கடந்த 20 ஆண்டு களில் வியாவில் ஐயனார் கோயிலின் ஊடாகவும் தனிப்பட்ட வகை யிலும் அவர் ஆற்றிய சமய சமூக பணிகள் ஏராளம்.

வியாவில் ஐயனார் கோயிலில் அமைந்துள்ள கணபதீஸ்வரகுருக்கள் நூலகம் மற்றும் கோயில் சுற்றுப்புறத்தில் அமைந்துள்ள பசுக்கள் வளரும் சூழல் என்பன காரைநகரில் சைவத்தின் பெருமையை பறைசாற்றுபவனவாகும்.

2013ம் ஆண்டு வியாவில் ஐயனார் தேவஸ்தானத்தினால் வெளியிடப்பட்ட 'சைவ களஞ்சியம்' எனும் நூல் இந்த நூற்றாண்டின் சைவ சமய பெருமைகளையும் சமய வரலாற்றினை கூறும் அளப்பரிய அறிவுக்களஞ்சியமாக வரலாற்று பதிப்பாக அமைந்துள்ளது.

சமய தொண்டும் சமுதாய பணியும் அத்தோடு அடுத்த நூற்றாண்டிற்கும் சைவ சமயத்தின் ஊடாக ஊரிற்கும் நாட்டிற்கும் பெருமை மிக்க நற்பிரஜைகளாக இன்றைய இளைஞர்களை வழிநடாத்தி கல்வியாளர்களை சித்திக்க வைத்து சிறப்புடனே வியாவில் ஐயனார் கோயில் நிர்வாக பணியினை செயற்படுத்தி வரும் திரு.க.சோமசேகரம் ஐயா அவர்களிற்கு 'எனது ஊர் காரைநர்' சஞ்சிகையும் www.karainews.com இணையத்தளமும் காரைநகர் மக்கள் சார்பாக 'காரைநகர் சேவையாளர்' கௌரவம் வழங்கி கௌரவிப்பதில் பெருமையும் பேருவகையும் கொள்கின்றது.

---

## காரை மண்ணின் நிரந்தர சேவையாளரானார் அமரர் சபாபதி சபாரத்தினம் அவர்கள்



பிரித்தானியா காரை நலன்புரி சங்கத்தின் ஸ்தாபகர் - களில் ஒருவரும் பிரான்ஸ் காரை நலன்புரிச் சங்கத்தின் ஆரம்பத்திற்கு வித்திட்டவரும், இலண்டனில் குடிபெயர்ந்து வாழ்ந்து வந்தபோதும் காரைநகர் மக்களின் கல்வி, பொருளாதாரம், அபிவிருத்தி என்பவற்றில் அதிக அக்கறையுடன் செயற்பட்டு நேரடியாகவும் பிரத்தானியா காரை அபிவிருத்தி சபை யின் ஊடாக சேவையாற்றியவர் அமரர் சபாபதி சபாபாரத்தினம் அவர்கள்.

அன்னார் தனது காலத்திற்கு பின்னரும் காரைநகர் மண்ணின் மக்களின் தேவைகளிற்கு உதவும் பொருட்டு வருடந்தோறும் 4,000 இலண்டன் பவுண்டுகள் (அண்ணளவாக 10 இலட்சம் வருடம் தோறும்) பிரித்தானியா காரை நலன்புரிச் சங்கத்திற்கு கிடைக்கும் வகையில் வைப்புக்களை மேற்கொண்டு சென்றுள்ளார். அது மட்டுமன்றி அதன் மூலம் பிரித்தானியா காரை நலன்புரிச்சங்கம் மேற்கொண்டு 1000 பவுண்டுகளை பெற்றுக்கொண்டும் வருகின்றது.

அத்துடன் அன்னாரது ஞாபகார்த்தமாக அவரது துணைவியாரும் கலாநிதி ஆ.தியாகராஜா அவர்களின் மகளுமான திருமதி மங்கையற்கரசி சபாரத்தினம் மற்றும் அவர்களுடைய பிள்ளைகள் இணைந்து காரைநகர் மாணவர் களின் கல்வி வளர்ச்சி க்கு தொடர்ச்சியாக உதவும் பொருட்டு 'கலாநிதி ஆ.தியாகராஜா அறிவியல் அறக்கட்டளை" என்னும் கல்வி நிதியத்தினை 17.12.2012 அன்று ஆரம்பித்து வைத்தனர்.

முதற்கட்டமாக 25 இலட்சம் ரூபாய்கள் வரையான நிதி நிரந்தர வைப்பில் இடப்பட்டும் தொடர்ந்து அமரர் சபாபதி சபாரத்தினம் அவர்களது குடும்பதினர்களில் ஒரு கோடி ரூபாய்கள் வரையான நிதி வைப்பில் இடப்படும் எனவும் அதன் மூலம் பெறப்படும் வங்கி வட்டிப்பணம் ஊடாக கல்விக்கான திட்டங்கள் வருடந்தோறும் நிறைவேற்றப்பட வேண்டும் என்னும் நோக்கில் அதனை செயற்படுத்த ஒரு நிர்வாகமும் அமைக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

## காரை மண்ணின் ‘கர்ணன்’ கொடைவள்ளல்
## ‘கலைமாடக்கோன்’ சண்முகம் சிவஞானம்



காரைநகர் மண்ணின் கலை கலாசாரம் சமய பண்பாட்டு விழுமியங்கள் நாடறிந்த உண்மை. அன்றும் இன்றும் என்றும் காரை மண்ணின் தன்மை மாறாது மண்ணிற்காக பணிபுரிந்தவர்கள் ஏராளம், அவர்களில் தாராள மனத்துடன் தனக்கு தானே ஈடாக காரை மண்ணின் மக்களின் கலை, கலாசாரம், சமய பண்பாடுகளை வழிநடாத்த முன்னின்று நிதிக்கொடை வழங்கி வழங்கி வருபவர் திரு.சண்முகம் சிவஞானம் அவர்கள்.

திரு.சண்முகம் சிவஞானம் அவர்கள் காரைநகர் கிழவன்காடு கலாமன்றத்தின் சேவையறிந்து செயற்பட்டு வருவதுடன் அனைத்து வசதிகளுடன் கூடிய கலை அரங்கு ஒன்றினை அமைத்துக்கொடுத்துள்ளார். ஈழத்து சிதம்பரத்தில் மணிவாசகர் மடாலயத்திற்கு பலகோடி செலவில் அன்னதான மண்டபம் ஒன்றினை அமைத்துக்கொடுத்துள்ளார். அதற்கு அருகாமையில் அடியார்கள் தங்கும் விடுதி அமைத்துக்கொடுத்துள்ளதுடன், காரைநகர் நுழைவாயிலில் அமைந்துள்ள மடத்துக்கரை அம்பாள் ஆலயத்தில் மணிமண்டபம் மற்றும் தேர்முட்டி என்பனவும் அமைத்துக்கொடுத்துள்ளதுடன் தற்போது மருதடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் கர்ப்பக்கிரகம், அர்த்த மண்டபம், மகாமண்டபம் என்பவற்றை முற்றிலும் கருங்கற்களினால் அமைத்து வரும் திருப்பணியினையும் நிறைவேற்றி வருகின்றார். காரைநகரில் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழ்வாதார உதவிகள் இன்றி வாழும் குடும்பங்களிற்கான அத்தியாவசிய அவசிய தேவைகளை ஊரறியாது செய்து வருபவர். காரைநகர் மாணவர்கள் கல்வி பயில சிறப்பு வசதிகளை கல்வி நிலையத்திற்கு அமைத்துக்கொடுத்தவர்.

காரைநகரில் மட்டுமன்றி மற்றும் பல நகரங்களில் தமிழர்களின் கலை, கலாசாரம், பண்பாடு, கல்வித்தகமைகளை மேம்படுத்த பலவித நற்காரியங்களில் ஈடுபாட்டுடன் செயற்பட்டு காரை மண்ணின் வளர்ச்சியிலும் காரை மண்ணின் பெயர்விளங்க கொடை வள்ளலாக விளங்கிவரும் காரை மண் தந்த ‘கர்ணன்’ கலைமாடக்கோன் சண்முகம் சிவஞானம் அவர்களிற்கு ‘காரைநகர் சேவையாளர்’ கௌரவம் வளங்கி சிறப்பிப்பதில் பெருமை கொள்கின்றது ‘எனது ஊர் காரைநகர்’ சஞ்சிகையும் www.karainews.com இணையத்தளமும்.

## காரைநகர் அபிவிருத்தி சபை புதிய குடிநீர் வழங்கும் பௌசர் ஒன்றினை பெற்றுக்கொண்டது!

காரைநகர் அபிவிருத்தி சபையினரால் காரைநகர் மக்களிற்கு வழங்கப்படும் குடிநீர் விநியோகத்திற்காக புதிய பௌசர் ஒன்று 29.11.2019 அன்று பெற்றுக் கொள்ளப்பட்டது. தற்போது குடிநீர் வழங்கி வரும் பௌசர்கள் 5 வருடத்திற்கு மேற்பட்ட பழைமை யடைந்துள்ளதுடன் இவை வருடம் ஒன்றிற்கு 5 இலட்சத்திற்கும் மேற்பட்ட திருத்த செலவுகளை



ஏற்படுத்தி வருவகின்றன. குடிநீர் வழங்குவதில் இடர்பாடுகள் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதனையும் கருத்தில் கொண்டு புதிய பௌசர் ஒன்றினை தற்போதைய நிர்வாக சபையினர் 56 இலட்சம் ரூபா செலவில் இப்புதிய பௌசரினை பெற்றுக்கொண்டனர்.

கடந்த 5 ஆண்டுகளாக குடிநீர் வளங்கல் மூலம் இலாபமாக பெற்றுக்கொண்ட நிதி கடந்த நிர்வாக சபைகளினால் தனித்து நிரந்தர வைப்பில் சேமித்து வைக்கப்பட்டிருந்ததுடன், அதன் மூலம் பெறப்பட்ட இலாபமானது மீண்டும் குடிநீர் வழங்கலுக்காக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் என்கின்ற தீர்மானமும் கடந்த கால நிர்வாக அமைப்புக்களினால் கடைப்பிடிக்கப்பட்டு வரப்பட்டது.

கடந்த ஆண்டு திரு.சிவா மகேசன் தலைமையிலான நிர்வாக சபை யினரால் புதிய பௌசர் ஒன்றினை பெற்றுக்கொள்ள முயற்சித்த போதிலும் தற்போது திரு.இராமநாதர் சிவசுப்பிரமணியம் அவர்கள் தலைமையிலான நிர்வாக சபையினரால் இப்பணி கைகூடி வந்துள்ளது. அது மட்டுமன்றி மேலும் ஒரு புதிய பௌசர் ஒன்றினை பெற்றுக்கொள்ளவும் நிர்வாக சபை முயன்று வருவதும் குறிப்பிடத்தக்கது.

## ஊர் உயர இறுதி மூச்சுவரை உழைத்த அமரர் ஜெ.தில்லையம்பலவாணர்



சிவ நெறியும் செந்தமிழும் திகழும் காரைநகரில் பல கல்விமான்களும், வர்த்தகப் பெருமக்களும், அரசியல் பிரமுகர்களும் வாழ்ந்திருக்கின்றார்கள். ஆனால் சமூகத் தொண்டு புரிந்து புகழுற்றவர்களை விரல் விட்டு எண்ணலாம். அப்படியானவர்களுள் ஒருவர் அமரர் ஜெயசிங்கம் தில்லையம்பலவாணர் அவர்கள். 1976ல் சவுதி அரேபியாவில் பாரேன் நாட்டில் ஒரு நிறுவனத்தில் கணக்காளராக பணிபுரிந்து தனது பிற்காலத்தில் ஊருக்காக தொண்டாற்றுவதற்கு எண்ணி காரைநகர் அபிவிருத்திச் சபையை உருவாக்கவும் பின்னர் அதன் செயலாளராக 2005 முதல் இறக்கும் வரை பணியாற்றவும் தன்னை அர்பணித்தார். அத்துடன் காரைநகர் கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் பொருளாளராகவும், காரைநகர் அரசினர் வைத்திய சாலையின் அபிவிருத்தி சபை தலைவராகவும், காரைநகர் பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் தலைவராகவும் இருந்து காரைநகர் பிரதேசத்தின் அபிவிருத்திக்கு பெரும் பணியாற்றினார்.

காரைநகர் கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகாவித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கப் பொருளாளராக இருந்து கல்லூரியின் வளர்ச்சியில் பங்காற்றியதுடன் ஆரம்பப் பாடசாலையான சுப்பிரமணிய வித்தியா சாலை புனரமைக்கப்பட்டு புதுப்பொழிவுடன் அனைத்து வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுப்பத ற்கு முன்னின்று செயற்பட்டார். காரைநகர் மக்களின் சுகாதார சேவையை மேம்படுத்துவதற் காகவும் வைத்திய வசதிகளை பெற்றுக் கொடுப்பதற்காகவும் காரைநகர் அரசினர் வைத்திய சாலையின் அபிவிருத்திச் சபையின் தலைமைப் பொறுப்பை ஏற்று வைத்திய சாலையின் செயற்பாட்டிற்கு உந்து சக்தியாக விளங்கினார். காரைநகர் பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்று அதற்கு புத்துயிர் வழங்கி மக்களுக்கு சிறப்பான சேவை யாற்ற வழிவகுத்ததுடன் ஊழியர்களின் உயர்விற்கும் உந்து சக்தியாக செயற்பட்டார்.

காரைநகர் அபிவிருத்திச் சபையை 2005ம் ஆண்டு ஜனவரி மாதம் 28ம் திகதி உருவாக்கி அதன் செயற்திறன் மிக்க செயலாளராக இருந்து பல்வேறுபட்ட அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்தார். குறிப்பாக புலம்பெயர்ந்து பல நாடுகளிலும் உள்ள எமது ஊரவர்களை ஒரு முகப்படுத்தி காரைநகர் அபிவிருத்திக்கு ஆற்றிய பணி போற்றுதற்குரியதாகும். அந்த வகையில் இங்கிலாந்தில் வதியும் காரைநகர் மக்களின் நிதி உதவியுடன் குடிநீர் விநியோகிப்பதற்கு பவுஸர் பெற்று சுண்ணாகத்தில் இருந்து குடிநீர் எடுத்துவரப்பட்டு மக்களுக்கு தொடர்ச்சியாக விநியோகித்து வந்தமை. காரைநகரில் உள்ள பிரதான வீதிகள் சந்திகளில் வீதி மின் விளக்குகள் பொருத்தியது. இங்குள்ள வயல் விளைச்ச லை ஏற்படுத்தவாய்க்கால்கள் மதகுகள் என்பன புனரமைத்ததுடன், மழைநீர் நடுப்பானைகளையும் செப்பனிட்டு நெல் உற்பத்தியினை அதிகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டது.

சுவிஸ் காரை அபிவிருத்திச் சபையின் உதவியுடன் காரைநகர் வைத்திய சாலையில் புதிய கட்டிடங்கள் அமைத்துக் கொடுத்தது. கனடா காரை கலாசார மன்றம், அவுஸ்ரேலியா காரை நலன்புரிச் சங்கம் என்பவற்றின் உதவியுடன் மாணவர்களுக்கு கல்வி ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொடுத்தல் போன்ற பல்வேறு பணிகள் அவர் காலத்தில் முன்னெடுக்கப்பட்டதுடன் காரைநகர் வலந்தலைச் சந்தியில் பயணிகளுக்கான நிழல் குடை அமைத்தல், காரைநகருக்கான அலங்கார வளைவு வலந்தலையில் அமைத்தல் காரைநகர் பிரதேச பாலர் பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கான மாதாந்த சம்பளத்தை பெற்றுக் கொடுத்தல், காரைநகர் புது வீதியில் நவீன வசதிகளைக் கொண்ட நூலகம் ஒன்றினை இருமாடிக் கட்டிடத்துடன் அமைத்தல், வைத்தியசா லையின் வைத்திய வசதிகளை மேம்படுத்தல் போன்ற பல்வேறு பணிகளை மேற்கொள்வதற்கு அவர் இதயசுத்தியுடன் முழுமனதுடன் செயற்பட்டு வந்தவர். இந்த வேளையிலே லண்டன் காரை நலன்புரிச் சங்கத்தின் அழைப்பை ஏற்று அவர்களின் ஆண்டு விழாவில் கலந்து கொண்டுவிட்டு நாடு திரும்பிய வேளையில் 13.03.2008 காலன் அவரை கவர்ந்து விட்டான். அவர் விட்டுச் சென்ற பணியை தொடர்வதே நாம் அவருக்கு செய்யும் பெரும் கைங்கரியமாகும். 'எனது ஊர் காரைநகர்' மற்றும் www.karainews.com இணையத்தளமும் அன்னாருக்கு 'காரைநகர் சேவையாளர்' கௌரவம் வளங்கி கௌரவிப்பதில் பெருமை கொள்கின்றது.

## திரு.இராமநாதர் சிவசுப்பிரமணியம் தலைமையில் 11.08.2019 முதல் காரைநகர் அபிவிருத்தி சபை



11.08.2019 அன்று காரைநகர் அபிவிருத்தி சபையின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபை தெரிவும் நூற்றுக்கணக்கான காரை மக்களின் பிரசன்னத்துடன் காரைநகர் சைவமகா சபை மண்டபத்தில் நடைபெற்றது.

இவ்வருடம் காரைநகரில் ஏற்பட்டிருந்த குடிநீர் தட்டுப்பாடு மற்றும் இதர காரணங்களினால் காரைநகர் அபிவிருத்தி சபையின் சேவைகள் காரைநகர் மக்களிடத்தே பெரும் அதானிப்பை பெற்றுக்கொண்டது. அதன் காரணமாக காரைநகர் அபிவிருத்தி சபையின் நிர்வாகத்தில் பங்கு கொள்வதற்காக காரைநகர் இளைஞர் மத்தியிலும் காரைநகர் மக்களிடத்திலும் பெரும் ஆர்வம் ஏற்பட்டிருந்தது. இந்த நிலையில் மிகவும் பரபரப்பாக நடைபெற்றிருந்த பொதுக்கூட்டத்தின் போது காரைநகர் சுப்பிரமணியம் வீதியை சேர்ந்தவரும் இலண்டனில் வர்த்தக உரிமையாளராக பணியாற்றியவரும் முன்னாள் வங்கியாளரும், காரைநகர் மருதடி வீரகத்தி விநாயகர் ஆலய இராஜகோபுர திருப்பணி உபயகாரருமான திரு.இராமநாதன் சிவசுப்பிரமணியம் அவர்கள் தலைவராக தெரிவு செய்யப்பட்டார்.

தொடர்ந்து உபதலைவராக திரு.கணேசபிள்ளை அருள்ராசா, செயலாளராக திரு.சுப்பிரமணியம் செந்தூரன், உபசெயலாளராக திரு.கை.நாகராசா, பொருளாளராக திரு.சின்னத்தம்பி பரம்தில்லைராசா ஆகியோருடன் 9 நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

1. வரதராசா சிறிரங்கன்
2. விக்கினேஸ்வரன் ஜெயகாந்தன்
3. இராஜசிங்கம் திருப்புகழூர்சிங்கம்
4. நித்தியானந்தம் சபேசன்
5. வேலுப்பிள்ளை மாணிக்கம்
6. கந்தசாமி விக்கினேஸ்வரன்
7. வேலுப்பிள்ளை சபாலிங்கம்
8. நாகலிங்கம் பாலகிருஸ்ணன்
9. ஆண்டிஐயா அருள்ராசா



## சமய சமூக பணிகளில் ஈடுபட்டு வரும் ஓய்வு பெற்ற அதிபர் கதிரவேலு தில்லையம்பலம் 'காரைநகர் சேவையாளர்' கௌரவம் பெறுகின்றார்



காரை மண்ணில் பிறந்து இன்றும் காரை மண்ணில் வாழ்ந்து இம் மண்ணுக்காக சேவையாற்றி வருபவர்கள் ஒரு சிலரே. அவர்களுள் 80 வயதைக் கடந்த நிலை -யிலும் பொதுப் பணிகளில் ஈடுபட்டு காரை மண்ணின் வளர்ச்சிக்கு அயராது பாடுபடுபவர் ஓய்வு பெற்ற அதிபர் கதிரவேலு தில்லையம்பலம்.

கடந்த 20 வருடங்களுக்கு மேலாக காரைநகர் மணிவாசகர் சபையினுடைய பரீட்சை செயலாளராகஇருந்து கல்லூரி மாணவர்களின் சமய அறிவினைப் பெருக்குவதற்கும் பரீட்சைகளில் உயர் பெறுபேறுகளை அடைவதற்கும் அயராது உழைத்து வருகின்றார். அத்துடன் பல்வேறு சமய சமூகப் பணிக-ளிலும் ஈடுபட்டு வருகின்றார்.

விளானை களபூமி காரைநகரை பிறப்பிடமாக கொண்ட இவர் தமது தமிழ் மொழி மூலம் கல்வியை களபூமி சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாசாலையில் கற்று அங்கு சிரேஸ்ட தராதரப் பத்திர வகுப்பில் (S.SC) சித்தியடைந்தார். பின்பு தனது ஆங்கிலக் கல்வியை காரைநகர் இந்துக் கல்லூரியில் கற்று அவர் ஆங்கில சிரேஸ்ட தராதரப் பத்திர பரீட்சையில் (S.SC) சித்தியெய்தினார்.

பின்பு அவர் 1953ம் ஆண்டு கேகாலை மாவட்டத்தில் ஆங்கில உதவி ஆசிரியராக நியமனம் பெற்று முப/மடுன்போவா அ.மு.பாடசாலையில் கடமை புரிந்தார்.பின்பு பொலனறுவ மாவட்டம் மன்னம் பிட்டி அ.த.க. பாடசாலைக்கு மாற்றம் பெற்று அங்கு உதவி ஆசிரியராக கடமை புரியும் போது ஆசிரிய தராதரப் பத்திர பரீட்சையில் சித்தியடைந்தார். அதன் பின்பு 1961-1962ம் ஆண்டில் யா/பலாலி ஆசிரிய கலாசாலையில் தமிழ் நெறிப் பயிற்சி பெற்றார். பின்பு மாத்தளை மாவட்டம் ஆவ/கடுகவெல அ.மு.பாடசாலையில் உதவி ஆசிரியராக கடமை புரிந்தார். அவர் மன்னம் பிட்டி அ.த.ப.பாடசாலையில் கற்பித்த போது 5ம் வகுப்பு க.பொ.த சாதாரண வகுப்புகளில் படித்த மாணவர்களை பாடசாலை தவிர்ந்த நேரங்களிலும் பிரத்தியேகமாகக் கற்பித்து பரீட்சைகளில் பின்தங்கிய பிரதேச மாணவர்களை சித்தியடையச் செய்தார். அவரது மாணவர்கள் பலர் ஆசிரியர்களாகவும், அதிபர்களாகவும் கிராமசே-சவையாளர்களாகவும் லிகிதர்களாகவும் கடமை புரிந்தும் இளைப்பாறியும் உள்ளனர். சிறப்பாக கேக-ாலை மாவட்டத்தில் படித்த முஸ்லீம் மாணவன் ஒருவன் மன்னம் பிட்டி அ.த.க பாடசாலையில் சேர்ந்து ஏழு மாதங்கள் இவரிடம் படித்து முதலாவது மாணவனாக அப்பாடசாலையில் க.பொ.த சாதாரண பரீட்சையில் சித்தியடைந்தமை அக்கல்வி வட்டாரத்தில் இவருக்கு சிறந்த புகழை ஈட்டிக் கொடுத்துள்ளது.

அதன் பின்னர் வவுனியா மாவட்டத்தில் செட்டிக்குளம் அ.த.க.பாடசாலை, ஓமந்தை அ.த.ம.வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளிலும் உதவி ஆசிரியராக கடமை புரிந்து கற்பித்தல் முயற்சியினால் அதிபரது பாராட்டையும் பெற்றுள்ளார். பின்பு 1965ம் ஆண்டு மாற்றம் பெற்று காரை-ரநகர் இந்துக் கல்லூரியிலும், மறைஞானசம்பந்தர் வித்தியாசாலையிலும் உதவி ஆசிரியராகக் கடமை புரிந்தார். அப்போது தனது முயற்சியால் தமிழ்பால பண்டிதர் பரீட்சையிலும் இளஞ்சைவப் புலவர் பரீட்சையிலும் சித்தயடைந்து தமது தகமையைக் கூட்டிக்கொண்டார்.
பின்பு 1972ம் ஆண்டு தொடக்கம் 1988ம் ஆண்டுவரை அதிபராக காரைநகர் இந்துக் கல்லூரி ஆரம்பப் பாடசாலையிலும், இலகடி த.க பாடசாலையிலும், காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி ஆரம்ப பாடசாலை யிலும் கடமை புரிந்துள்ளார். அப்போது அனேக மாணவர்களை ஐந்தாம் வகுப்பு புலமைப் பரீட்சையில் சித்தியடையவும் ஊக்குவித்துள்ளார். இதனால் அதிபர்கள், கல்வி அதிகாரிகள் பெற்றோர்கள் மாணவர்களது நன்மதிப்பையும்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

"செய்யும் தொழிலே தெய்வம்"
"முயற்சி மெய்வருந்தக் கூலிதரும்"
என்னும் கொள்கையுடையவர். அவர் ஓய்வு பெற்ற பின்பும் காரைநகரில் பொதுத் தொண்டுகளிலும் சமூ கத்தொண்டுகளிலும் சேவை யாற்றி வருகின்றார். குறிப்பாக காரைநகர் மணிவாசக சபையினர் ஆண்டு தோறும் நடாத்தும் சைவ சமய பாட பரீட்சையின் செயலாளராக தொடர்ந்து இருபது ஆண்டுகள் சேவை செய்து வருகின்றார். அத்துடன் சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயத்தில் பழைய மாணவர் சங்கம் ஆரம்பித்து உபதலைவ ராக இருந்து சேவையாற்றினார். விளானை சனசமூக நிலையத்தின் தலைவராக கடமையாற்றியுள்ளதுடன் விளானை முன்பள்ளியையும் 1998ல் ஆரம்பித்து வைத்தார். களபூமி திக்ககரை முருகன் கோயில் திருப்பணிச் சபை செயலாளராக கடமை புரிந்த இவர் காரைநகர்

பல நோக்கு கூட்டுறவுச் சங்க இயக்குனர் சபை உறுப்பினராகவும் பதவி வகித்துள்ளார். அத்துடன் காரைநகரில் பல்வேறு நிகழ்வுகளையும் முன்னின்று நடாத்தும் திரு.கதிரவேலு தில்லையம்பலம் ஆசிரியர் அவர்களுக்கு 'காரைநகர் சேவையாளர்' கௌரவம் வழங்கி கௌரவிப்பதோடு நீண்ட ஆயுளுடன் சிறப்பாக வாழ "எனது ஊர் காரைநகர்" கலாண்டு சஞ்சிகை நேயர்கள் சார்பில் வாழ்த்துகின்றது.

## காரைநகர் இந்துக்கல்லூரி முன்னாள் அதிபர் திருமதி வாசுகி தவபாலன் அவர்களிற்கு சிறந்த அதிபருக்கான 'குரு பிரதீபா பிரபா' விருது வழங்கியது கல்வி அமைச்சு

காரை இந்து முன்னாள் அதிபரும் கல்லூரியின் பழைய மாணவியும் யாழ் வைத்தீஸ்வரா கல்லூரியின் அதிபருமாகிய திருமதி வாசுகி தவபாலன் அவர்களிற்கு 2019ம் ஆண்டு சிறந்த அதிபருக்கான 'குரு பிர-தீபா பிரபா' விருது வழங்கி கௌரவித்துள்ளது கல்வி அமைச்சு. காரைநகர் இந்துக் கல்லூரியில் அதிபராக கடமையாற்றிய 2013 முதல் 2016ம் ஆண்டு காலப்பகுதியில் பாடசாலையின் வளர்ச்சிக்கும் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும் பெரிதும் உறுதுணையாக இருந்துள்ளதுடன் பாடசாலையின் எதிர்கால வளர்ச்சியை கருத்தில் கொண்டு பௌதீக வளங்கள் மிகப்பாரிய அளவில் வளர்ச்சி கண்டதும் இவருடைய அதிபர் காலத்தில் என்பதும் குறிப்பிடத்தக்கது. காரை இந்துவின் பெயர் மீண்டும் நிலைத்து கல்லூரியின் வரலாற்றில் துணிவுடன் செயற்பட்ட மற்றுமோர் அதிபராக திகழ்ந்துள்ளதுடன் 'எனது ஊர் காரைநகர்' சஞ்சிகையினால் 'காரைநகர் சேவையாளர்' விருதும் 2017ம் ஆண்டு வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்த தும் குறிப்பிடத்தக்கது.






### காரைநகர் கல்விக் கோட்ட பாடசாலைகளின் விபரங்கள் - 2019

| No. | Name of School | Type | Boys | Girls | Total |
|---|---|---|---|---|---|
| 1 | Karainagar Hindu College | 1AB | 292 | 283 | 575 |
| 2 | Yarlton College | 1AB | 313 | 277 | 590 |
| 3 | Suntharamoorthy Nayanar Vidyalayam | Type II | 36 | 53 | 89 |
| 4 | Viyavil Saiva Vidyalayam | Type II | 47 | 48 | 95 |
| 5 | Ayili Sivagnanothaya Vidyalayam | Type III | 27 | 20 | 47 |
| 6 | Karai Meihandan Vidyalayam | Type III | 31 | 27 | 58 |
| 7 | Karai Uri A.M.T.M Vidyalayam | Type III | 57 | 63 | 120 |
| 8 | Palavoodai A.T.M School | Type III | 05 | 01 | 06 |
| 9 | Thoppukadu Marignanasampantha Vidyalayam | Type III | 25 | 33 | 58 |
| 10 | Valanthalai North A.M.T.M School | Type III | 27 | 30 | 57 |
| 11 | Valanthalai South A.M.T.M School | Type III | 38 | 46 | 84 |
| 12 | Verapiddy Sri Kanesa Vidyalayam | Type III | 33 | 24 | 57 |
| 13 | Subramaniya Vidyasalai | Type III | 46 | 47 | 93 |
| | Total | | 977 | 952 | 1929 |

## 2019ம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள்
## காரைநகர் பாடசாலைகள்

2019 இவ் ஆண்டு இடம்பெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் காரைநகர் கோட்டத்தைச் சேர்ந்த 12 மாணவர்கள் வெட்டுப் புள்ளிக்குமேல் பெற்றுச் சித்தியடைந்துள்ளனர். புலமைப் பரிசில் பரிட்சைப் பெறுபேறுகள் 06.10.2019 மாலை பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டது. அதன் பிரகாரம் காரைநகர் பெறுபேற்று நிலவரம் வருமாறு:

**யாழ்ற்ரன் கல்லூரி ஆரம்ப பாடசாலை:**
செல்வன் மயூரகுமரன் பவித்திரன் 184
செல்வி தவராசா தர்மினி 165

**சுப்பிரமணிய வித்தியாசாலை**
செல்வி கிருஸ்ணமூர்த்தி ஆரவி 163 புள்ளிகள்.

**வலந்தலை தெற்கு அ.மி.த.க. பாடசாலை, (அப்புத்துரை பள்ளிக்கூடம்)**
செல்வன் கிருபாகரன் சன்ஜை - 160 புள்ளிகள்
செல்வி புண்ணியமூர்த்தி கஸ்தூரி - 154 புள்ளிகள்.

**ஆயிலி சிவஞானோதயா வித்தியாசாலை**
செல்வன் பி.நிதுர்ஸன் 154 புள்ளிகள்
செல்வி எஸ்.சுகிர்தா 158 புள்ளிகள்.

**சுந்தரமூர்த்திநாயனார் வித்தியாசாலை:**
ரவிச்சந்திரன் ஜதுசா 158
தம்பிராசா தரணிகா 156

**மெய்கண்டான் வித்தியாசாலை:**
செல்வன் கங்காதரன் கஜரூபன் 155

**ஊரி அ.மி.த.க.பாடசாலை:**
ஸ்ரீதரன் லோசிகா 153

**வேரப்பிட்டி ஸ்ரீகனேசா வித்தியாசாலை:**
செல்வன் மோகன்ராஜ் ரிஷாந் 153

இவ்வாண்டு 5ம் தர புலமைப்பரிசில் பரீட்சை எழுதிய மொத்த காரைநகர் மாணவர்கள் எண்ணிக்கை: 121

**மேலும் காரைநகர் 12 ஆரம்ப பாடசாலைகளில் இருந்து 2019 புலமைப்பரிசில் பரீட்சை எழுதியவர்கள் மற்றும் சித்தியடைந்தவர்கள் விபரம் வருமாறு:**

| | பாடசாலை | தோற்றியோர் | புலமை சித்தி | 70க்கு மேல் |
|---|---|---|---|---|
| 1 | யாழ்ற்ரன் கல்லூரி | 20 | 02 | 17 |
| 2 | சுப்பிரமணிய வித்தி | 19 | 02 | 14 |
| 3 | ஊரி அ.மி.த.க | 18 | 01 | 13 |
| 4 | மெய்கண்டான் வித்தியாசாலை | 13 | 01 | 11 |
| 5 | வலந்தலை வடக்கு அ.மி.த.க (சடையாளி) | 12 | 00 | 11 |
| 6 | வேரப்பிட்டி ஸ்ரீகணேசா வித்தியாசாலை | 09 | 01 | 08 |
| 7 | ஆயிலி சிவஞானோதயா வித்தியாசாலை | 08 | 02 | 05 |
| 8 | வலந்தலை தெற்கு அ.மி.த.க(அப்புத்துரை) | 07 | 02 | 05 |
| 9 | வியாவில் சைவ வித்தியாசாலை | 05 | 00 | 03 |
| 10 | சுந்தரமூர்த்திநாயனார் வித்தியாசாலை | 04 | 02 | 02 |
| 11 | தோப்புக்காடு மறைஞானசம்பந்தர் வித்தி | 04 | 00 | 03 |
| 12 | பாலாவோடை இந்து தமிழ் கலவன் பாடசா | 02 | 00 | 00 |
| | மொத்தம் | 121 | 12 | 92 |



சுப்பிரமணியம் வித்தியாசாலை அதிபர்
ஆசிரியருடன் சித்தி பெற்ற மாணவி
செல்வி கிருஸ்ணமூர்த்தி ஆரவி



அப்புத்துரை பாடசாலை அதிபர்
ஆசிரியருடன் சித்தி பெற்ற மாணவர்கள்
செல்வி புண்ணியமூர்த்தி கஸ்தூரி
செல்வன் கிருபாகரன் சன்ஜை,



ஆயிலி பாடசாலை அதிபர் ஆசிரியருடன்
சித்தி பெற்ற மாணவர்கள் செல்வன்
பி.நிதுர்ஸன், செல்வி எஸ்.சுகிர்தா



சுந்தரமூர்த்திநாயனார் வித்தியாசாலை
பிரதி அதிபர் மற்றும் வகுப்பாசிரியருடன்
சித்தியடைந்த மாணவிகள்
ரவிச்சந்திரன் ஜதுசா,
தம்பிராசா தரணிகா



மெய்கண்டான் வித்தியாசாலை அதிபர்
ஆசிரியருடன் சித்தியடைந்த மாணவன்
செல்வன் கங்காதரன் கஜரூபன்



ஊரி அ.மி.த.க. பாடசாலை
ஆசிரியையுடன் சித்தியடைந்த மாணவி
ஸ்ரீதரன் லோசிகா 153



வேரப்பிட்டி ஸ்ரீகணேசா வித்தியாசாலை
அதிபர் ஆசிரியருடன் சித்தியடைந்த
மாணவன் செல்வன் மோகன் ரிஷாந்





யாழ்ற்ரன் கல்லூரி ஆரம்ப பாடசாலையில் இருந்து சித்தி பெற்ற மாணவன்
செல்வன் மயூரகுமரன் பவித்திரன் மற்றும் செல்வி தவராசா தர்மினி

## ஊர் நடப்பு: “நல்லா சொன்னியள்”

**எழுதித்தள்ளியவர்: காரை கந்தையா பத்மநாதன்**



என்னப்பா பக்கத்து வீட்டில என்ன விசேசம் ஒரே சத்தமாக்கிடக்கு கேற்றடியிலயும் ரெண்டு மூண்டு வாகனங்கள் நிக்குது எண்டபடியே ஒவ்பீசாலை வந்த ஆனந்தன் கேட்டான். அது ஒண்டுமில்லை -யப்பா ஆறு மாதத்துக்கு முந்தி எங்கட நல்லம்மா ஆச்சி செத்துப்போனவ எல்லே அப்ப அவவின்ரை பிள்ளையள், மருமக்கள், பேரப்பிள்ளையள் ஒருத்தரும் ஹொலிடே கிடைக்கேல்லை எண்டு வரேல்லையெல்லே எண்டாள் சித்திரா. ஓ இப்ப என்ன அவை ஹொலிடே கிடைச்சு வந்திருக்கின -மோ எண்டான் ஆனந்தன். ஓமப்பா அதுதான் வந்திருக்கினம் எண்டாள் சித்திரா.

இவட்டையள் இப்ப என்னத்துக்கு வந்ததுகள். கிழவி நல்லா இருக்கேக்கையும் வரேல்லை பிறகு சுகமில்லாமல் கிடக்கேக்கையும் வரேல்லை பிறகு செத்தவீட்டுக்கும் வரேல்லை. ஸ்கைப்பிலையெல்லே செத்த வீடு கொண்டாடினதுகள், கிழிசகெட்டதுகள். உவன் பாலனெல்லே கிழவி -யிட்ட சின்ன வயதில வாங்கிச்சாப்பிட்ட நன்றி மறக்காமக் கொள்ளிவைச்சவன். கிழவி எத்தினை நாள் கையெடுத்து என்னைக்கும்பிட்டது அட ஆனந்தா உவன் பெரியவனை எண்டான ஒருக்கா வரச்சொல்லடா, இல்லாட்டி என்ரை கட்டை வேகாதடா எண்டு. உந்த தூமைச்சீலையளுக்கு எத்தினை தரம் நான் கோலெடுத்துச் சொல்லியி -ருப்பன் எண்டான் ஆனந்தன்.

கிழவி சின்ன வயதில தேப்பன் சாக இவட்டையளை எவ்வளவு கஸ்ரப்பட்டு வளத்தது தெரியுமே. எப்பிடி உதுகளை படிக்க வைச்சது தெரியுமே. எல்லாம் நாட்டுப்பிரச்சினை இஞ்சை இருக்கேலாதெண்டு நாட்டை விட்டுப்போனதுகள் . நல்ல விசயம்தான் அதுக்கு கிழவி பட்ட கஸ்ரங்களையும் கிழவியையும் மறக்கிறதே கழிசடையள் எண்டு துள்ளிக் குதித்தான் ஆனந்தன். நீங்கள் ஏனப்பா கத்திப்பிறசறை ஏத்திறியள் எண்டாள் சித்திரா.



அடி விசரி கைகால் இருக்கேக்கை கிழவி ஒரு மாதிரி சமாளிச்சுது. பிறகு படுக்கையிலை விழுந்த பிறகு உனக்குத் தெரியும்தானே. சாப்பாட்டுக்கு எவ்வளவு கஸ்ரப்பட்டிச்சு. ஒழுங்கான குளிப்பு முழுக்கி ல்லாமல் படுக்கைப்புண்ணும் வந்து கஸ்ரப்பட்ட தெல்லே. எத்தினை நாள் உடுப்பும் இல்லாமல் சலம் மலம் எல்லாம் ஒண்டாக்கிடந்து நாறின தெல்லே கிழவி அப்ப நீயும் பாலனு-மெல்லே போய்க்கழுவித்துடைச்சு சீலை-யைக்கட்டிச்சுத்தி கிழவியைப்படுக்க வைச்சனீங்கள்.

கடைசியாக் கிழவிக்கு சேடம் இழுக்கேக்கை கண்ணால குடம் குடமாவெல்லே கண்ணீர் வந்தது கவனிச்சனியெல்லே. நான் அவட்டையள் எல்லாத்து க்கும் செத்த பிறகு எடுத்துச்சொன்னான் எல்லே. அட ஆரெண்டான்ன ஒருத்தன் வந்து கொள்ளியெண்டான்னை வைச்சுப்போட்டுப் போங்கடா எண்டு வந்தாங்களே.

வேலையில லீவில்லை ஹொலிடேயில்லை எண்டவங்கள் பிறகேன் இப்ப வந்தவங்களாம். இப்ப என்னண்டு லீவு கிடைச்சதாம் நீ கேக்கை -யில்லையே எண்டான் ஆனந்தன். நான் ஏனப்பா உதைக்கேக்கிறன் அங்கை சின்னன் பொன்னன் எண்டு கனக்க நிக்குதுகள். அதுகளுக்கு இதுதான் கிறான்ட்மாவின் பெட்றூம், இதுதான் கிறான்ட் -மாவின் பூஜா றூம் எண்டு காட்டிக்கொண்டு நிண்டிச்சினம். அப்ப நீ கோடியுக்கை கிடந்த மரக்கட்டிலை அந்தப்பெடி பெட்டையளுக்குக் காட்டேல்லையே உதுதான் கிறான்ட்மாவின் பாத்றும் எண்டபடியே கோபத்துடன் கேட்டவன் அப்ப என்னத்துக்கு வந்தவங்களாம் எண்டான்.

ஓமப்பா கிழவியின்ரை ஆறாம் மாதப்பூசை வடிவாக்குடுக்க வேணுமாம், புத்தகம் அடிக்க வேணுமாம், சொந்தங்கள் பந்தங்கள் எல்லாத்து -க்கும் சொல்லவேணுமாம், பெரிய ஹோல் எடுக்க வேணுமாம், வீடியோ எடுக்க வேணுமாம்,நிறைய ஐயர்மாரைக் கூப்பிட்டு தானம் குடுக்கவேணுமாம், அனாதை இல்லங்களுக்கு சாப்பாட்டு குடுக்க வேணுமாம் எண்டு சித்திரா லிஸ்ற் வாசிக்க, நிப்பாட்டடி நல்லா வாழ்ந்த மனிசியை அனாதை

மாதிரிச் சீரழிச்சுச் சாக்காட்டினவங்கள் இப்ப அனாதைப்பிள்ளையளுக்குச் சாப்பாடு குடுக்கிறாங்களாமோ ஏன் அதுகளையும் சாக்காட்டப் போறாங்களாமோ எண்ட ஆனந்தன் நீ அங்க பூசை வீட்டை போறன் புண்ணிய வீட்டை போறன் எண்டு வெளிக்கிட்டியோ வீண் பிரச்சனை வரும் எண்ட படியே சித்திரா கொண்டு வந்த தேத்தண்ணியையும் குடிக்காமல் எங்கேயோ வெளிக்கிட்டுப் போனான். ☆



சைவப்புலவர், சித்தாந்தரத்தினம் திரு.கந்தையா பத்மநாதன் BSc(Hon), MA, MSc. MPM, PGDHR, PGDE, MIM, MIEP, MIC ChemC, FCPM, FAAPM அவர்கள் காரைநகர் மண்ணின் மக்களின் கலாசார பின்னணிகள் மீது பேரன்போடு வாழ்பவர். கல்வித்திணைக்களத்தின் 'அண்மித்த பாடசாலை சிறந்த பாடசாலை' திட்டத்தின் இயக்குனராக பணியாற்றுபவர். ஊர் மணத்துடன் கவிதை, கதை, நாட்டு நடப்புகள் என்பவற்றுடன் சமய அறிவியல் சம்பந்தமானதும் விஞ்ஞான ஆராட்சிகள் சம்பந்தமான சுவாரசீகமான பல படைப்புக்களை எழுதி வெளியிட்டு நூலாசிரியராகவும் திகழ்ந்து வருகின்றார்.

## பசுமைப்புரட்சி

சூழலும் வாழும் மண்ணும் வளம்படுத்தும் இலக்கோடு காரைநகர் பெரியமணல் சிவகௌரி சனசமூக நிலையத்தால் நடைமுறைப்படுத்தப்படும் மரம்நடுகைத்திட்டமானது வருடாவருடம் சிலகிராமங்களை தெரிவு செய்து நல்ல பயன்தரும் மரங்களை வழங்கிவருகின்றது . 2019ம் ஆண்டு இந்தவருடம் கரைநகர் வடகிழக்கு J/47 கிராம சேவையாளர் பிரிவில் சியோன் தேவாலயம் மற்றும் J/48 பிரிவில் சிதம்பரேஸ்வரா சனசமூக நிலையத்திலும் நெல்லி மர கன்றுகள் 08.11.2019 அன்று சிவகௌரி சனசமூக நிலையத்தினரால் வழங்கப்பட்டன , இந்த மண்ணும் மரம் நடுகையும் இயற்கை வளத்திட்டத்தை எமது சனசமூக முன்னாள் தலைவரும் தற்போது கனடாவில் வசித்து வரும் செல்வரத்தினம் செல்வாநாயகம் அவர்களின் பூரண அனுசரனையோடு வழங்கப்பட்டன.






















# காரைநகர் திண்ணபுரம் ஈழத்து சிதம்பரம் ஐயனார், சிவன் இரட்டை கோபுர திருப்பணியும், 1998.06.07 அன்று நடைபெற்ற மகா கும்பாபிஷேகத்துடன் கூடிய இரட்டை கோபுர கும்பாபிஷேக செயற்பாடுகளும்...

வே.செல்வநாயகம் (திருப்பணி சபை செயலாளர் 1982-1998)



ஈழத்திலே சிறப்பு மிகுந்த தலங்களில் ஒன்றான ஈழத்துச் சிதம்பரம் என அழைக்கப்படும் காரைநகர் சிவன்கோவில் திருப்பணிச் சபையின் பரிபாலனத்தை 1982 முதல் 1998ம் ஆண்டு வரை திருவருள் வழிகாட்ட நிறைவேற்றியதுடன் ஐயனார் சிவன் இராஜகோபுரங்களை சிறப்புடன் அமைத்து மகா கும்பாபிஷேகத்துடன் இராஜகோபுரங்களின் கும்பாபிஷேகத்தினையும் திருவருள் துணையுடன் நிறைவேற்றிய பெருமகிழ்ச்சியுடன் சுருக்கமான அறிக்கையை தங்கள் முன் சமர்ப்பிக்கின்றோம்.

பெருஞ்சிறப்புடன் திகழும் இக்கோவிலில் தூலலிங்கம் எனக்கூறப்படும் வாயிற்கோபுரம் இல்லாமல் இருந்தது பெருங்குறையாகும். கோபுரம் பல தத்துவ உண்மைகளை வெளிப்படுத்துவதோடு மட்டுமல்லாது கோவிலுக்கும் பேரழகைக் கொடுத்து புதுப்பொலிவை ஊட்டுவதாகும்.



'கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" என்றதன் பொருளை உணர்ந்த அன்றைய திருப்பணிச் சபை -யினர் 1965.09.08 அன்று சிவன் கோபுரத்திற்கான அத்திவாரத்தினை இட்டார்கள் . சில கருத்து வேறுபாடுகள் காரணமாக வேலைகள் தொடர்ந்து நடைபெறவில்லை. பின்னர் இவ்வூர் வர்த்தகப் பிரமுகரும் ஐயப்ப பக்தருமான திரு.க.பொன்னம்பலம் அவர்கள் 07.02.1979ம் ஆண்டு முன்வந்து ஐயனார் கோபுரத்திற்கான அத்திவாரத்தினை இட்டு கட்டுமான வேலைகளை ஆரம்பித்தார். இவ்வேலையும் தொடர்ந்து நடைபெறவில்லை. இந்நிலையில் 1982.06.27 அன்று காரைநகர் மக்கள் ஒன்றிணைந்து புதிய திருப்பணிச் சபையை உருவாக்கினார்கள். புதிய திருப்பணிச் சபையானது ஐயனார் மீது நேர்த்தி வைத்து 1982.09.13 அன்று ஐயனார், சிவன் கோபுரக்கட்டுமானப் பணிகளை ஆரம்பித்து விரைவாக நடைபெற்றது.

காரைநகர் மக்களும் வர்த்தகர்களும் மற்றும் மலேசியா, சிங்கப்பூர், இங்கிலாந்து, சாம்பியா, சவூதி அரேபியா, கனடா, ஜேர்மனி, அமெரிக்கா, சுவிற்சலாந்து, பிரான்ஸ், அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் வதியும் இவ்வூரவர்களும் பெருநிதியினை வழங்கி இத்திருப்பணியினை ஊக்குவித்தனர். இராஜகோபுரங்களின் நிர்மாண வேலைகளுடன் 1988ம் ஆண்டு மூலமூர்த்திகள் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு உட்கோவில்கள், தூபிகள் புதுப்பிக்கப்பட்டு வர்ணம் தீட்டப்பட்டு 1991ம் ஆண்டு மகா கும்பாபிஷேகத்திற்கான ஆயத்தங்களை மேற்கொண்டோம். அவ்வேளையில் நாட்டில் தோன்றிய அசாதாரண சூழ்நிலையினால் இவ்வூர் மக்களில் பெரும்பான்மையோர் 1991.04.25ம் திகதி வேறு ஊர்களுக்கு இடம் பெயர்ந்து சென்றனர். இந்த நிலையிலும் ஊரிலே தங்கியிருந்த கோவில் ஆதீனகர்த்தாக்களில் ஒருவரான அமரர் து.முருகேசு அவர்கள் மணற்காடு கும்பநாயகி அம்மன் கோவில்

> காரைநகர் திண்ணபுரம் சிவன்கோயில் திருப்பணி சபையில் 1982 முதல் 1998 வரை இரட்டை கோபுர திருப்பணி வேலைகளின் போது செயலாளராக திருப்பணி புரிந்து இக்கட்டான சூழ்நிலைகளின் போது இடம்பெயர்ந்து சென்ற போதெல்லாம் திருப்பணி தொடர்பான பத்திரங்களையெல்லாம் ஒன்றுதவறாது பத்திரப்படுத்தியதுடன் வரவு செலவு கணக்கறிக்கையில் எவ்வித தவறுகளும் ஏற்படாத வண்ணம் அடியவர்களின் நம்பிக்கைக்கும், நன்மதிப்புக்கும் பாத்திரமாக நடந்து கொண்டு 1998ம் ஆண்டு நடைபெற்ற மகா கும்பாபிஷேகம் வரை இப்பணியே தன் திருப்பணியாக கடமையாற்றிய திரு.வே.செல்வநாயகம் அவர்கள் கும்பாபிஷேகத்தையொட்டி வெளியிடப்பட்ட கும்பாபிஷேக மலரில் எழுதிய செயலாளர் அறிக்கை.



பிரதம குருக்களாக இருந்த சிவஸ்ரீ நா.ஞானசம்பந்தக் குருக்களினதும் சிவஸ்ரீ க.வைத்தீஸ்வரக்குருக்களி -னதும் உதவியுடன் கோவில் நித்திய பூசைகளை நடாத்திவித்து வந்தார். 1993, 1994ம் ஆண்டுகளில் திருப்பணிச் சபையினர் சார்பில் யாம் திருகோணமலையூடாக கப்பல் மார்க்மாக இங்கு வந்து அந்த நேரத்தில் தேவைப்பட்ட சில திருப்பணிகளை நிறைவேற்றி வைத்தோம்.

ஐந்து வருடங்கள் சென்ற பின்னர் 1996 சித்திரையில் மக்கள் கொஞ்சம் கொஞ்சமாக ஊர்காவற்றுறையூடாக மீளக் குடியேறிக்கொண்டு இருந்தனர். 1997.12.01ம் திகதி பொன்னாலை ஊடான போக்குவரத்து அனுமதிக்கப்பட்டது. இந்நிலையில் இலங்கையின் பலபாகங்களிலும் தங்கியிருந்த திருப்பணிச் சபை செயற்குழு உறுப்பினர்களினதும் சிவஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்களினதும், பல பெரியார்களினதும், ஆதீன கர்த்தாக்களினதும் ஊரில் வாழ்ந்த மக்களினதும் ஆலோசனையின்படியும் கருத்துக்களின் படியும் 1998ம் ஆண்டு ஆனி மாதத்தில் கும்பாபிஷேகத்தை நடாத்துவதற்கு வேண்டிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டது. இதற்கான செயற்பாட்டில் செயலாளரான என்னுடன் ஆதீனகர்த்தாக்களின் உறவினரும் இளைப்பாறிய ஆசிரியருமான திரு.ந.பாக்கியராஜா அவர்கள் செய்த தொண்டு இங்கு குறிப்பிடத்தக்கது.



இதனைத் தொடர்ந்து யாம் உட்கோவில், தூபிகள், திருக்குளங்கள், சுற்றுப்பிரகாரம் திருத்த வேலைகள் மேற்கொண்டு வர்ண மை பூசி புதுப்பொலிவு ஊட்டினோம். கும்பாபிஷேக நாள் நிர்ணயிக்கப்பட்டு 1998.06.07 ஞாயிற்றுக்கிழமை சிவஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள் பிரதம சிவாச்சாரியராக அவரது தலைமையில் தமிழகத்திலும் இலங்கையிலும் தலைசிறந்த அறுபதிற்கும் மேற்பட்ட அந்தண குருமார்களினால் ஆறாவது மகா கும்பாபிஷேகமும் ஐயனார் சிவன் இராஜ கோபுர கும்பாபிஷேகமும் ஒன்றாக பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் கண்டுகளிக்க வெகுசிறப்பாக திருவருளின் துணை யுடன் நிறைவேறியது.



கும்பாபிஷேகத்தினைக் தொடர்ந்து 43 நாட்கள் தினமும் அபிஷேகம் நடைபெற்றது. 45வது நாள் சங்காபிஷே கத்துடன் மண்டலாபிஷேகம் இனிது நிறைவேறியது. மண்டலாபிஷேகப் பூர்த்தியிலன்று இந்த கும்பாபிஷேக மலரை வெளியிட எண்ணியிருந்தும் நாட்டில் உள்ள நிலை மைகளினால் இது கைகூடவில்லை. காலங் கடந்தாவது கருத்து செறிவு மிக்க மலராக வெளியிடுவதினையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறோம்.

ஆதீனகர்த்தாக்களின் வேண்டுதலின் பிரகாரம் வடபகுதிக்கான புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகாரசபை யாழ்ப்பாண அரசாங்க அதிபர் ஊடாக ரூபா 11,12,247/50 சதத்தினை தேர்கள் புனரமைப்பதற்காக 1998ம் ஆண்டில் வழங்கியது. இங்கு குறிப்பிடத்தக்கது. மேலும் 30 இலட்சம் ரூபா எமது கோவில் புரமைப்புக்கென ஒதுக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார். இந்த நிதிக்கான புனரமைப்பு வேலைகளையும் நிறைவேற்றும் பொறுப்பையும் ஆதீனகர்த்தாக்கள் திருப்பணிச் சபையிடமே ஒப்படைத்துள்ளார்கள். இந்த நிதிகள் கிடைப்பதற்கு தூண்டுகோலாக விளங்கியவர்களு -க்கும் அரசாங்க அதிகாரிகளுக்கும் நாம் நன்றியைத் தெரிவிக்கின்றோம்.





திருப்பணி வேலைகள் நடைபெற்ற காலத்தில் ஆதீன கர்தாக்களாகவிருந்த அமரர் அ.ஆண்டிஐயாவும், அமரர் து.முருகேசுவும் அளித்த ஆலோசனை-களையும் ஆதரவையும் யாம் என்றும் மறக்க முடியாது. இதே போன்று திருப்பணிகள் நடைபெற்ற காலத்தில் அவ்வப்போது ஆலோசனைகள் வழங்கிய கோவில் பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீக.மங்களேஸ்வரக்குருக்கள் அவர்களையும் யாம் என்றும் மறக்க முடியாது.

அமரர்களான மு.பொன்னுத்துரை, க.சிற்றம்பலம், வி.மு.சண்முகம், மா.சண்முகநாதனும் சபையில் இருந்து இத்திருப்பணிக்கு தொண்டாற்றியமையும் நாம் நினைவு கூரத்தக்கதாகும். திருப்பணி வேலைகள் நடைபெறும் காலத்தில் நிதிசேர்த்து அனுப்புவதத்தில் ஆர்வமாக முன்னின்று உழைத்த வெளியூர், உள்ளூர் அன்பர்கள், நிதியுதவிகளை வாரிவழங்கியவர்கள், மகாகும்பாபிஷேகத்தினை சிறப்புடன் நிறைவேற்றுவதற்கு பெரும் நிதியினைத் தந்தவர்கள், பெரும் நிதியினைச் சேர்த்து அனுப்பிய வெளியூர் உள்ளூர் அன்பர்கள், சென்னையில் இருந்து சிவாச்சாரியர் தலைமையில் ஏனைய சிவாச்சாரியர்கள் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் சென்று திரும்புவதற்கு வேண்டிய போக்குவரத்து வசதிகளையும் கும்பாபிஷேக பொருட்களை இலவசமாக கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் எடுத்துச் சென்று உதவிய தனியார் நிறுவனத்தினர், கும்பாபிஷேகத்திற்கு தேவையான குருக்கள் வேட்டி சால்வை உட்பட சகல துணிவகைகளை தந்துதவிய தனியார் நிறுவனத்தினர், இராஜ கோபுர வேலைகளைச் செய்த சிற்பாச்சாரியார்கள், ஆசாரிமார்கள், மற்றும் உதவியாளர்கள், மகாகும்பாபிஷேகத்தினை செவ்வனே நிறைவேற்றிய சிவாச்சாரியார்கள், கும்பாபிஷேக காலத்தில் அடியார்களுக்கு அன்ன தானம் வழங்குவதற்கு உதவியாக பொருளுதவி, வாகன உதவி புரிந்த யாழ் வர்த்தகப் பெருமக்கள், அன்னதானத்தை முன்னின்று நடாத்தியவர்கள், கும்பாபிஷேகத்தை கண்டு களித்த பக்த கோடிகள் அனைவருக்கும் ஐயனார், சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமான் திருவருள் கடாட்சம் கிட்டுவதாக.




06.06.2011 இல் நடைபெற்ற ஈழத்து சிதம்பர கும்பாபிஷேக காட்சிகளே புகைப்படத்தில் எடுத்துவரப்பட்டுள்ளன.

மேலும் திருப்பணிச் சபையினரின் வேண்டுதலையேற்று இம்மலரின் ஆசிரியராக பணிபுரிந்த இளைப்பாறிய ஆசிரியர் திரு.ந.பாக்கியராசா அவர்கட்கும் மற்றும் துணை ஆசிரியர்கட்கும் மலரினை சிறந்த முறையில் அச்சிட்டுத்தந்த காரைநகர் பாலா அச்சக உரிமையாளருக்கும் எமது நன்றியை கூறக்கடமைப்பட்டுள்ளோம்.

திருப்பணிச் சபையினரின் கடந்த கால செயற்பாடுகளில் ஏதேனும் தவறுகள் காணப்படின் அவற்றை மன்னித்து இத்திருப்பணியை புனிதமாக்கி ஏற்றுக்கொள்ளும்படி ஐயனார் சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமானைப் பணிகின்றோம். வணக்கம்.

வே.செல்வநாயகம் (செயலாளர்)
திருப்பணி சபை, காரைநகர் சிவன்கோவில். 1998

**காரைநகர் திண்ணபுரம் சிவன்கோயில் ஐயனார், சிவன் இரட்டை இராஜகோபுர திருப்பணியின் போது திருப்பணி சபை தலைவராக 1990 முதல் 1998 வரை திருப்பணியாற்றிய அமரர் சு.முருகேசு அவர்கள் 1998 இல் நடைபெற்ற மகாகும்பாபிஷேகத்தின் கும்பாபிஷேக மலரிற்கு வழங்கிய முகவுரை**



இலங்கையில் உள்ள பழம் பெரும் ஆலயங்களுள் காரைநகர் திண்ணபுரத்தில் எழுந்தருளியுள்ள சுந்தரேஸ்வரப் பெருமானின் ஆலயமும் ஒன்றாகும். மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய ஸ்தல சிறப்புகளைப் பெற்ற இவ்வாலயம் தென்னகத்தில் தலமகிமை பெற்று விளங்கும் சிதம்பரத்தில் நிகழும் கிரியை மரபுகளைப் பின்பற்றும் பாரம்பரியச் சிறப்புப் பெற்றது. இவ்வகையால் இத்தலத்திற்கு 'ஈழத்து சிதம்பரம்" என்ற பெயரும் உரியதாயிற்று.

ஆதியிலே அரசமரத்திற்கு சமீபமாக ஆண்டி என்னும் பெரியாரால் அகழ்ந்து எடுக்கப்பட்ட பூரணை, புட்கலை சமேத ஐயனார் திருவுருவே முதன் முதலில் இக்கோவிலில் ஸ்தாபிக்கப்பட்டதாகும். அப்போது இக்கோவிலின் பெயர் ஆண்டிகேணி ஐயனார் கோவில், ஐயனாரும் சிவனும் அருகருகே கிழக்கு நோக்கி அமர்ந்திருந்து அருளாட்சி செய்வது வேறு எங்கும் காணாத இவ்வூருக்குரிய தனிச்சிறப்பாகும்.



இக்கோவில் வரலாற்றிலே பெரும்பாலான திருப்பணிகள் ஆதீன-கர்தாக்களாகிய அம்பலவிமுருகர், சண்முகத்தார் சின்னத்தம்பியார், மாசிலாமணி என்போரினால் செய்யப்பட்டு வந்தன. இவர்களுக்குப் பின் கோவிலை கருங்கல்லினால் அமைக்கும் நோக்குடன் அப்போதைய ஆதீனகர்த்தாக்களாகிய ஆண்டிஐயா, முருகேசு ஆகியோரது அனுசரணையோடு இவ்வூர் சிவநேயர்கள் 15.04.1963ம் ஆண்டு காரைநகர் சிவன் கோவில் திருப்பணிச்சபையை அமைத்தனர். இவர்களது முயற்சியினால் சிவன் அம்பாள் கற்பக்கிரகம், அர்த்த மண்டபம், மகாமண்டபம் ஆகியன சிறந்த சிற்ப வேலைப்பாடுகளுடன் அமைக்கப்பட்டன. இன்னும் விநாயகர், சுப்பிரமணியர், சண்டேசுவரர், நால்வர் கோவில்கள் புதிதாக அமைக்கப்பட்டதுடன் நடேசர் கோவிலும் திருத்தி அமைக்கப்பட்டது. மற்றும் திருத்த வேலைகளும் செய்யப்பட்டன.
திருவருட்கடாட்சத்தாலும் திருப்பணிச்சபையினரின் அயராத உழைப்பினாலும் அழகுற அமைந்த கோவிலில் ஜிர்ணோத்தாரண அஸ்டபந்தன ஐந்தாவது மகாகும்பாபிஷேகம் 10.07.1970இல் நிறைவேறியது.

'நீறிருக்கும் நெற்றியும் ஆறிருக்கும் ஊரும்
கோபுரமிருக்கும் கோவிலும்" பேரளகானவை.

ஈழத்து சிதம்பரம் என்ற திண்ணபுரச் சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரன் ஆலயம் ஸ்தூலலிங்கமாகிய இராஜ கோபுரத்தை தன்னகத்தே அடக்காமலிந்தது ஒரு பெருங்குறையாகும். அக்குறையை நீக்குவதற்கு திருவருள் பாலித்து முன்னைய திருப்பணிச்சபையினரால் 08.09.1965ம் ஆண்டு சிவன்கோபுரத்திற்கான அத்திவாரம் இடப்பட்டது. சிவன் கோபுரத்தோடு சேர்த்து ஐயனாருக்கும் கோபுரம் அமைக்க வேண்டும் என்று பல அடியவர்கள் வற்புறுத்தியமையினால் கோபுரவேலை தடைப்பட்டது. திருவருள் வழிகாட்ட ஐயனார் பக்தருமாகிய திரு.கந்தையா பொன்னம்பலம் தமது உபயமாக அத்திவாரம் இட்டு நிலமட்டம் வரை கட்டுவித்தார். ஆனால் கோபுர கட்டுமான வேலை சிலகருத்து வேறுபாடுகள் காரணமாக நடைபெறவில்லை.

யாம் எமது குலதெய்வமாகிய மருதடி வீரகத்தி விநாயகப் பெருமான் கோயிலை மற்றும் பல அன்பர்களோடு சேர்ந்து 13.06.1982ம் ஆண்டு ஜிர்ணோத்ததாரண குடமுழுக்கு விழா கண்டுகளித்துக் கொண்டு இருந்தோம். அப்போது தோன்றிய திருவருளின் உந்துதலினால் 27.06.1982ம் ஆண்டு

தற்போதைய புதிய காரைநகர் சிவன் கோயில் திருப்பணிச் சபை தெரிவு செய்யப்பட்டு 13.09.1982ம் திகதியில் ஐயானார் சிவன் கோபுரக் கட்டுமான வேலையை தாமதமின்றி ஆரம்பித்தோம்.



"கற்பனையான கோபுரங்கள்தான் அமைக்கப் போகின்றார்களோ..?
எங்ஙனம் கும்பாபிஷேகம் செய்விக்கப் போகிறார்கள்
இவற்றிற்கு பெருநிதி கிடைக்குமா..?
எல்லோரும் ஏறிய குதிரையில் ஏறி இடறி விழுவார்களோ..? என்று அச்சம் சிலர் உள்ளத்தில் எழுந்தது.

"இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன் கண்விடல்..... (திருக்குறள்)

ஒரு சபையானது அதன் செயலாளரின் திறமையிலே தங்கி இருக்கின்றது. ஆண்டிகேணி ஐயனாரின் கிருபையால் ஐயப்பட பக்தர் வே.செல்வநாயகம் இந்த சபையில் இருந்தது நாம் செய்த பெரும் பாக்கியம். அவர் ஐயனார் மேல் அளவிலா அன்பு பூண்டு தொண்டு செய்பவர். ஆண்டுதோறும் ஐயப்பவிரதம் அனுஷ்டித்து இந்தியா சென்று சபரிமலை ஐயப்பனை தரிசிப்பவர். ஐயப்பன் பேரில் நம்பிக்கையோடு அவர் எத்தொழிலையும் தொடங்கினால் அது நிறைவேறுவதை அவரோடு இரட்டையாக இணைந்து சிவதொண்டு செய்யப்பாக்கியம் பெற்ற அடியேனது அனுபவம். திருவருள் வழிகாட்ட ஐயனாரின் திரிதள இராஜகோபுரமும் சிவனின் பஞ்சதள இராஜ கோபுரமும் ஒரேநேரத்தில் பூர்த்தியாகியது. மூலமூர்த்திகளும் 1998ம் ஆண்டு பாலஸ்தாபனம் செய்யப்பட்டு உட்கோவில்கள் வெளிக்கோவில்கள் புதுப்பிக்கப்பட்டன. 1991ம் ஆண்டு குடமுழுக்கிற்கு ஆயத்தம் செய்த பொழுது ஏற்பட்ட இடப்பெயர்வினால் யாவும் செயலற்றுத் தடைப்பட்டன. பெரும்பாலான மக்கள் வெளியூர்களுக்கு இடம் பெயர்ந்து சென்று வதிந்தனர். இப்படியாக ஏழு வருடங்கள் கழிந்த பின்னர் இப்போ மக்களில் மூன்றிலொரு பங்கினரே மீளக்குடியமர்ந்துள்ளனர். மீண்டும் (1998ம் ஆண்டு) உட்கோவில்கள் வெளிக்கோவில்கள் திருத்த வேலைகள் செய்து வர்ணங்கள் பூசி அழகுறச் செய்து இப்பெருஞ்சாந்தி விழாவைக் காரைநகரில் என்றும் காணாத பக்த ஜனத்திரள் கண்டுகளிக்க பெருவிழாவாக நடாத்திய திருவருள் அற்புதத்தில் அற்புதமே!

யாம் திருப்பணி ஆரம்பித்த நாள் தொடக்கம் தேவையான நிதி மக்களிடமிருந்து நன்கொடையாக வந்து சேர்ந்தன. இவற்றிற்கு வரவு-செலவு கணக்கறிக்கை இலங்கையில் மிகப்பிரபலமான வி.மு.பேரம்பலம் கட்டயக்கணக்காளர் நிறுவனத்தால் அவ்வவ் நிதியாண்டு முடிவில் பரீட்சிக்கபடப்ட பின்னர் திருப்பணிச் சபையினரால் இன்றுவரை கிரமமாக 'நிதி அறிக்கை' என்ற பெயரில் சமர்ப்பித்து வருகின்றோம் என்பது யாவரும் அறிந்ததே.

இத்திருப்பணிக்கு செம்பொருளீந்த ஊரவர்களுக்கும் வெளிநாடுகளில் வதியும் இவ்வூரவர்களுக்கும் எமது சிரம் தாழ்ந்த வணக்கம். கருங்கல்லினாலான கோபுரக் கட்டுமான வேலைகளையும், செங்கல், சீமெந்தினாலான கட்டுமான வேலைகளையும், பொம்மை வேலைகளையும் சிறப்பாக நிறைவேற்றித் தந்த ஸ்தபதிகள் அராலி நாகமுத்து அவர் மகன் கோபாலரத்தினம், திருப்புல்லானை நாகலிங்கம், சந்திரன் ஆகியோருக்கும் என்றும் நாம் கடமைப்பட்டுள்ளோம்.

சிவஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள் தலைமையிலான சிவாச்சாரியார்கள் குடுமுழுக்கு செய்யக்கிடைத்ததும் எமது புண்ணியமும், பாக்கியமும் ஆகும். இப்பெரிய திருப்பணிக்கு ஒத்துழைப்பு நல்கிய ஆதீனகர்த்தாக்களாகிய அம்பலவிமுருகன், சுந்தரலிங்கம் ஆகிய இருவருக்கும் எமது நன்றி.

கும்பாபிஷேக நிறைவினையொட்டி திருப்பணிச்சபையினரால் வெளியிடப்படும் சிறப்புமலர் தலவரலாற்றுப் பெருமைகளையும், இவ்வூர் சிறப்புகளையும், சைவதத்துவங்களையும் எடுத்தியம்பும் நறுமலராக அருள்பாலிக்க வேண்டுமென கூத்தபிரானைப் பிரார்த்திக்கின்றேன்.

"மழை வழங்குக மன்ன னோங்குக
பிழையில் பல்வள மெங்கும் பெருகுக
தழைக வஞ்செழு த்தோசை தரைலொம்
பழைய வைதீக சைவம் பரக்கவே"



**சு.முருகேசு**
**தலைவர்.**
**திருப்பணிச் சபை, காரைநகர் சிவன்கோயில் 1998**

## காரைநகர் இந்துக் கல்லூரியில் 10.09.2019 அன்று நடைபெற்ற ஆசிரியர் தின விழா!



உயர்தர மாணவர் மன்றத்தின் ஏற்பாட்டில் அதிபர் சிவந்தினி வாகீசன் அவர்களின் வழிப்படுத்தலில் மாணவர் மன்றத்தின் தலைவர் ப.சசிகரன் தலைமையில் வெகுசிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்விற்கு பாடசாலையின் ஓய்வுநிலை அதிபர் திரு.கா.குமாரவேலு அவர்கள் பிரதம விருந்தினராகவும் பழைய மாணவர் சங்க கனடாக்கிளையின் பொருளாளர் திரு.மா.கனகசபாபதி அவர்கள் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டு நிகழ்வினை சிறப்பினத்தனர். அத்துடன் பழைய மாணவரும் பழைய மாணவர் சங்கத்தின் உபதலைவரும் ஓய்வுநிலை அதிபருமான கலாபூஷணம் பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை அவர்களும் கலந்துகொண்டு உரையாற்றினார்.















www.karainews.com
' எனது ஊர் காரைநகர் '
அரையாண்டு சஞ்சிகை



தொகுப்பாளர்:
தீசன் திரவியநாதன்
331 Trudelle Stree, Unit 34
Toronto, Ont. M1J 3J9 Canada
Email: theesan@karainews.com
TEL: 416 821 8390

**காரைநகர் இந்துக் கல்லூரியின் புதிய அதிபராக திரு.அரியரட்ணம் ஜெகதீஸ்வரன் நியமனம்**



காரைநகர் இந்துக் கல்லூரி -யின் புதிய அதிபராக திரு.அரியரத்தினம் ஜெகதீஸ்வரன் அவர்கள் மாகாண கல்வி அமைச்சினால் நியமனம் செய்யப்பட்டு 06.12.2019 அன்று பதவியைப் பொறுப்பேற்றுக்கொண்டார். காரைநகரைச் சேர்ந்த திரு.ஜெகதீஸ்வரன் காரை. இந்துவின் பழைய மாணவன் என்பது மட்டுமல்லாது இக்கல்லூரியில் பல ஆண்டுகள் விஞ்ஞான ஆசிரியராகவும் பணியாற்றியவர். சிறந்த விளையாட்டு வீரரான ஜெகதீஸ்வரன் அவர்கள் கல்லூரியின் விளையாட்டுத்துறைப் பொறுப்பாசரியராக இருந்து விளையாட்டுப் பயிற்சிகளை வழங்கிய வகையில் கல்லூரியின் விளையாட்டுத்துறை வளர்ச்சியில் பெரும்பங்கு கொண்டவர். பாடசாலை அபிவிருத்திச் சபை உறுப்பினராகவும் பதவி வகித்து கல்லூரியின் வளர்ச்சியை முன்னெடுக்க உதவியவர். கடந்த மூன்று ஆண்டுகளாக அர்ப்பணிப்பு மிக்க பதில் அதிபராகப் பணியாற்றிய திருமதி சிவந்தினி வாகீசன் அவர்களினால் சிறந்த முறையில் முன்னெடுக்கப்பட்டு வந்த பாடசாலையின் வளர்ச்சியை திரு.ஜெகதீஸ்வரன் அவர்கள் தொடர்ந்து நகர்த்திச் செல்ல காரைநகர் மக்களும் கல்வி சமூகமும் வாழ்த்துகின்றது.

**காரைநகர் இந்துக் கல்லூரியின் வளர்ச்சிக்காக 'விஸ்வலிங்கம் விஜயரத்தினம் நம்பிக்கை நிதியம்' கணக்கில் 30 இலட்சம் ரூபாய்கள்**




காரை இந்துவின் வருடாந்த பரிசளிப்பு தின விழாவினை நடாத்துவதற்கு நிரந்தரமாக உதவும்வகையில் 2014ஆம் ஆண்டு நி-றுவப்பட்ட 'மருத்துவகலாநிதி விஸ்வலிங்கம் விஜயரத்தினம் நம்பிக்கை நிதியம்' ஊடாக கனடாவில் வதியும் வைத்திய கலாநிதி விஸ்வலிங்கம் விஜயத்தினம் அவர்களில் இதுவரை 30 இலட்சம் ரூபாய்கள் இதுவரை நிரந்தர வைப்பில் இடப்பட்டுள்ளது. வருடாந்த பரிசளிப்பு தின விழாவினை தடையின்றி செயற்படுத்தும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட இந்நிதியத்தினுடாகப் பெறப்படும் பணத்தில், பரிசளிப்பு விழாவிற்கு ஏற்படக்கூடிய செலவுகளைத் தவிர்த்து, மீதமாகவுள்ள தொகை யினை கல்லூரியின் அபிவிருத்திப் பணிகளுக்குப் பயன்படுத்தலாம் என இந்நிதியத்தின் சட்ட ஆவணத்தில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. இந்நிதியத்தின் நிறுவுநரும், காரை.இந்து அன்னையின் உத்தமமான பழைய மாணவனுமாகிய குழந்தைகள் நல மருத்துவ நிபுணர் மருத்துவ கலாநிதி வி.விஜயரத்தினம் அவர்கள் இந்து அன்னை வளம்பெறவேண்டும் என்கின்ற உளார்த்தபூர்வமான சிந்தனையுடன் வேறு பலவகையிலும் பழைய மாணவர் சங்கத்தின் கனடாக் கிளையின் ஊடாக பேருதவி புரிந்து வருபவர்.

2014ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட நம்பிக்கை நிதியத்தின் வைப்புத் தொகையினை அதிகரிக்கும் வகையில் தொடர்ந்து வைப்பிலிட்டு வந்துள்ளதன் மூலம் நம்பிக்கை நிதியம் இருபத்தைந்து இலட்சம் ரூபாவாக கடந்த வருடம் அதிகரிக்கப்பட்டிருந்தது. இதன்மூலம் மேலதிகமாகப் பெறப்படும் நிதியிலிருந்து கல்லூரியின் மற்றுமோர் முக்கிய நி-கழ்வான வருடாந்த மெய்வல்லுநர் போட்டியையும் தொடர்ந்து நடாத்துவதென கல்லூரிச் சமூகம் தீர்மானித்ததன் அடிப்படையில் இப்போட்டியானது நம்பிக்கை நிதியத்தின் அனுசரணையில் 2019 இவ்வாண்டு நடாத்தப்பட்டிருந்தது.

மருத்துவகலாநிதி வி.விஜயரத்தினம் அவர்கள் யூன் 2019இல் மேலும் ஐந்து இலட்சம் ரூபாவினை இந்நிதியத்தில் வைப்பிலிட்டதன் மூலம் நம்பிக்கை நிதியத்தின் மொத்த வைப்புத்தொகை முப்பது இலட்சம் ரூபாவாக அதிகரித்துள்ளது. இதன்மூலம் கல்லூரியின் மேலும் சில முக்கிய மான தேவைகளுக்கு உதவக்கூடிய வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

04-07-2014 அன்று 'மருத்துவ கலாநிதி விஸ்வ லிங்கம் விஜயரத்தினம் நம்பிக்கை நிதியம்' முதற்கட்டமாக 15 இலட்சம் ரூபாய்கள் நிரந்தர வைப்பில் இட்டு ஆரம்பிக்கப்பட்டு நான்கு ஆண்டு களில் 30 இலட்சம் ரூபாய்களாக உயர்த்தப்பட்டு ள்ளமையும் இந்நிதியினை முழுமையாக வழங்கி ய மருத்துவ கலாநிதி வி.விஜரத்தினம் அவர்களும் இப்பணியினை முன்னின்று செயற்படுத்திய கனடா காரை இந்து பழைய மாணவர் சங்கமும் பாராட்டுதலுக்குரியவர்கள்.


யா/காரை மெய்கண்டான் வித்தியாலயம்

# பரிசளிப்பு விழா-2019

காலம்
08.11.2019 வெள்ளிக் கிழமை

நேரம்
காலை 9.30

தலைவர்
திரு.க.பேரின்பகுமார்
அதிபர்

பிரதம விருந்தினர்
உயர் திரு பொ. ரவிச்சந்திரன்
வலயக் கல்விப்பணிப்பாளர்,
வலயக் கல்வி அலுவலகம்,
தீவகம்

சிறப்பு விருந்தினர்கள்
திருமதி சூரியா சிவரூபன்
இணைப்பாளர்,உதய வாழ்வு
வட்டுக்கோட்டை
திருமதி மோகனதாசன் சோபனா
இணைப்பாளர்,
சக்தி கல்வி மேம்பாட்டு நிலையம்

கௌரவ விருந்தினர்
திருமதி நா.பராசக்தி
பழைய மாணவி

காரை மெய்கண்டான் பாடசாலையில் 08.11.2019 அன்று நடைபெற்ற 'பரிசளிப்பு விழா 2019' மிகவும் சிறப்பாக பாடசாலை அதிபர் தலைமையில் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் சகிதம் மிகவும் சிறப்பாக கொண்டாடப்பட்டது. 2019 இவ் ஆண்டு புலமைப்பரிசிலில் சித்திபெற்ற மாணவர்களுக்கு பரிசில்களை திரு த.விக்கினேஷ்வரன்(Boston,USA) அவர்கள் அன்பளிப்பு செய்தார், மேலும் மாணவர்களுக்கு திரு க.நடராசா அவரது தாயார் நினைவாக நூற்பரிசில்களையும் வழங்கியுள்ளார். மற்றும் இவ் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் எடுத்த மாணவனுக்கு அன்பளிப்பை செல்வி நிவேதிகா புனிதராசா (Canada) வழங்கியுள்ளார். இவ் விழாவுக்கான அனுசரனை சக்தி இலவசக்கல்வி மேம்பாட்டு நிலையம் மற்றும் அதன் இயக்குனர் திரு நா.இந்திரன் அவர்கள் வழங்கியிருந்தார்.















# மத்தியஸ்த சபை

சம்பிரதாய நீதிமன்ற அமைப்பக்கு வெளியில் மாற்று வழியில் பிணக்குகளைத் தீர்த்துக் கொள்ளும் முறை உபாயம் என "மத்தியஸ்தம்" செய்தல் என்பதை அறிமுகப்படுத்த முடியும். எங்கள் நாட்டின் அயல்
இராச்சியமான இந்தியாவிலும் பஞ்சாயத் என அழைக்கப்படும் மத்தியஸ்தம் செய்யும் கிராமம் சார்ந்த நிறுவனம் பராதன காலத்திலிருந்து இன்று வரை செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

அப்படியே இலங்கையிலும் பண்டுகாபய மன்னனால் அறிமுகம் செய்யப்பட்ட கிராம சபை செயல்முறைத் திட்டத்தினுள் மத்தியஸ்தம் செய்யும் கிராமிய மத்திய நிலையத்தின் அம்சங்களை அடையாளம் காணமுடியும்.

சுதந்திரம் கிடைத்ததன் பின்பு இலங்கையில் மத்தியஸ்தம் செய்வதற்காக கிராம நிறுவனங்களை அமைப்பதில் 1958ம் ஆண்டு 10ம் இலக்க இணக்க சபைச் சட்டத்தின் மூலம் முதல் முயற்சி எடுக்கப்பட்டது. இந்தச் சட்டத்தால் தொகுப்பு வாரியான நீதிமன்ற அமைப்பிற்கு
வெளியாக இலகுவான முறையில் குறைந்த செலவில் குறுகிய காலத்தினுள் சொந்தப் பிணக்குகளை தீர்ப்பதில் வழியைக் காட்டுவதே நோக்கமாகக் கொண்டிருந்தது. ஆனால் துரதிஷ்ட வசமாக இந்த இணக்க சபைக்கு அரசியல் சார்ந்த தலையீட்டில் செய்யப்பட்ட நியமணங்கள் மற்றும் இதற்குச் சமாந்தரமாக நடைபெற்ற அரசியல் கைகொடுத்தல் காரணமாக இணக்க சபையைப் பற்றிய பொதுமக்களிடமிருந்த நம்பிக்கைக்குப் பங்கம் ஏற்பட்டது. இணக்க சபையின் கௌரவத்தைப் பாதுகாப்பதற்கு இணக்கம் செய்பவர்களும் (இணக்க சபையின் அங்கத்தவர்கள்) செய்யமுடியாத நிலையிலிருந்த துடன் அதன் விளைவாக 1978 ஆம் ஆண்டின் இணக்க சபை கலைக்கப்பட்டு இணக்க சபைச் சட்டமும் ஒழிக்கப்பட்டது.

ஆனால் இணக்க சபை கலைக்கப்பட்ட உடனேயே இணக்க சபையினால் ஆற்றிய விலை மதிக்கத்தக்க சேவையை சட்டமியற்றுபவர்களுக்கு நன்றாக விளக்கிவிட்டது. இதன் காரணமாக இணக்க சபையால் எதிர்பார்க்கப்பட்ட சேவையையே நிறைவேற்றும் பொருட்டாக 1988ம் ஆண்டின் 72ஆம் இலக்கம் கொண்ட சட்டம் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டது. இச் சட்டத்தினால் இலங்கையில் மத்தியஸ்த முறை மீண்டும் அறிமுகம் செய்யப்பட்டது.

நாட்டின் சகல பிரதேச செயலாளர் பிரிவுகளையும் உள்ளடங்கும் விதத்தில் ஒவ்வொரு பிரிவுக்கும் ஒரு மத்தியஸ்தர் சபை என ஸ்தாபிக்கப்பட்டது. சகல பிரதம மத்தியஸ்தர் சபைகளிலும் தலைவர் பிரதான மத்தியஸ்தர்களுள் ஒருவரைக் கொண்டிருக்கும். மத்தியஸ்தர்களின் கருமங்கள் யாதெனில் பிணக்குகளுக்கு தொடர்பான இரு தரப்பினரையும் அழைத்துப் பிணக்குகளுக்கு ஏதுவான காரணங்களைக் கலந்தாலோசித்து இணக்கத்திற்கு வருவதற்கு உதவியளித்தலாகும்.

எப்படி இருந்த போதிலும் பிணக்குகளுக்கு முன் வந்த தரப்பினர்கள் சார்பாக தீர்மானத்தை எடுத்தல் அல்லது குற்றம் செய்த ஆட்களை தீர்மாணிப்பது மத்தியஸ்தர்களினால் நடைபெறமாட்டாது பிணக்கு ஒன்றை இணக்கம் காண்பதற்காக ஒரு சந்தர்ப்பத்தில் மத்தியஸ்தர்கள் மூன்று பேர்கள் அடங்கிய சபை ஒன்று நியமிக்கப்படும்.

**மத்தியஸ்தர் சபையினால் தீர்வு காணப்படக் கூடிய பிணக்குகள்.**

1). சிவில் பிணக்குகள்.

* கடனாகக் கொடுத்த பணத்தை அறவிட்டுக் கொள்ளல், உங்களால் இன்னொருவருக்கு கொடுக்கப்பட்ட கடன் காசு திரும்பவும் உங்களுக்குச் செலுத்தப்படாத போது அந்தக் கடன் தொகையை அறவிட்டுக் கொள்வதற்கு.
* நட்டஈட்டுப் பணத்தைப் பெற்றுக் கொள்வதற்கு உங்களுக்கு ஏற்பட்ட ஏதாவதொரு நட்டத்தை மீண்டும் பெற்றுக் கொள்வதற்கு பணத்தை அறவிட்டுக் கொள்வதற்கு.
* அசையாத மற்றும் அசையும் சொத்துக்கள் பற்றிய பிணக்கு ஏதாவது ஒரு சொத்தின் உரிமை அல்லது ஆட்சியை ஆண்டனுபவிக்கும் உரிமைகள் யாருக்குச் செல்லவேண்டும் போன்றவை பற்றிய பிணக்குகளைத் தீர்த்துக் கொள்ளல்.

2). சிறிய குற்றவியல் குற்றங்கள் தொடர்பான பிணக்குகள்.

* தன்னிச்சைப்படி காயம் விளைவித்தல் யாராவது ஒரு நபருக்கு அவருடைய உடலுக்குத் தீங்கு விளைவித்தல், அடித்தல் போன்ற விடயங்கள் தொடர்பான பிணக்கு.

* முறையற்ற தடைகள் அல்லது தொல்லைகள் ஏதாவதொரு இடத்திற்குச் சொத்துக்கு செல்வதற்கு உரிய உரிமையை முறையற்ற விதத்தில் தடுத்தல். சட்டபூர்வமான ஒரு செயலை செய்வதற்கு இடம் கொடுக்காதிருத்தல் போன்ற விடயங்கள்.

* தொந்தரவு செய்தல் அல்லது குற்றவியில் பலாத்காரம் ஒருவரின் உடலுக்கு அல்லது உள்ளத்திற்கு தீங்க விளைவித்தல் அல்லது ஏதாவது ஒரு செயலை செய்யும்படி அல்லது செய்யாதிருக்கும்படி சட்டவிரோதமாக பலவந்தப்படுத்தல்.

* ஒருவருக்கு அபகீர்த்தி உண்டாக்கல் நபர் ஒரு-வருடைய புகழுக்குத் தீங்கு விளைவிக்கும் வகை -யில் இன்னொரு நபரினால் செயற்பட்டிருக்கும் வேளையில் அது தொடர்பான முறையீடுகள்.

**மத்தியஸ்த சபைக்கு முறைப்பாடு ஒன்றைச் செய்யும் முறை:**

1). தன்னுடைய பெயர் விலாசம் மற்றும் பிணக்குத் தொடர்பான மற்றைய தரப்பினரின் பெயர் மற்றும் விலாசங்களையும் விளக்கமாகக் குறிப்பிட்டு பிணக்குகள் பற்றிய விளக்கமான விபரத்துடன் மத்தியஸ்தர் சபையின் தவிசாளருக்கு அனுப்பப்பட வேண்டும்.

தலைவரினால் பிறகு ஒரு சந்தர்ப்பத்தில் இரு தரப்பினரையும் விசாரணைக்காக அழைப்பிதழ் விடுக்கப்படும். மத்தியஸ்தர் சபையின் தவிசாளருடைய பெயர் மற்றும் விலாசத்தைப் பெறுவதற்காக உங்கள் பிரதேச கிராம சேவகரைச் சந்திக்கவும்.

2). பிரதேசத்தின் பொலிஸ் நிலையத்திற்கு கொடுக்கப்படும் முறைப்பாடுகள் சட்டத்தின் பிரகா -ரம் இணக்கத்திற்கு அனுப்பப்படவேண்டிய சந்தர்ப்பத்தில் பொலிஸ் நிலையத்தினால் மத்தியஸ்தர் சபைக்கு அனுப்பப்படும்.

3). தரப்பினரின் உடன்பாடு இருக்குமானால் அல்லது சட்டத்தினால் நியமிக்கப்பட்டு இருக்கும் வேளையில் நீதிமன்றத்தில் விசாரணை செய்யும் வழக்கு நீதிமன்றத்தினாலேயே மத்தியஸ்த சபைக்கு அனுப்பிவைக்கக் கூடும்.

இப்படி சட்டத்தினால் முடிவுற்றுள்ள சந்தர்ப்பங்களாவன:

* 25,000 ரூபாவிற்குக் குறைந்த சிவில் பிணக்குகள்.

* மத்தியஸ்த சபைச் சட்டத்தின் இரண்டாவது அட்டவணையில் காட்டப்பட்டுள்ள சிறு குற்றவியல் குற்றங்கள் தொடர்பான பிணக்குகள். இப்படியான பிணக்குகள் தொடர்பாக நீதிமன்றத்திற்குப் போவதற்கு முன் கட்டாயமாக மத்தியஸ்தர் சபைக்கு முறைப்பாடு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**மத்தியஸ்த சபைக்குச் செல்வதன் மூலம் அடையும் நன்மைகள்.**

1). நீதிமன்றத்தைப் போல அதிகமான செயன்துறைகள் இன்றி இலகுவாகவும் வசதியான விதிமுறைகளைப் பின்பற்றக்கூடியதாக இருத்தல்.

2). ஒரு தரப்பின் தோல்வியில் முடிவுறும் விதிமுறைகள் இன்றி இரு தரப்பினர்களுக்கும் இடையேயான உடன்பாட்டில் முடிவுறும் நடைமுறைகள்.

3). பிணக்குகள் தீர்ப்பதற்குச் செலவாகும் பணமும் எதிர்பார்த்ததை விட மிகவும் குறைவாகும்.

**மத்தியத்தம்**

- நீதிமன்றமொன்றில் வழக்கு விசாரணை செய்வதற்கு சமனானதல்ல.
- ஆட்கள் விசாரணை செய்யமாட்டார்கள்
- அது உங்களது பிணக்கை இரு தரப்பினரும் தீர்த்துக்கொள்வதற்கு வசதிகளை ஏற்படுத்தும் ஒன்றாகும்
- செயற்பாட்டினுள் பிணக்கை தீர்த்து கொள்வதற்கு பயன்படுத்தப்படும் ஒரே முறை கலந்துரையாடலாகும்.
- உங்களது பிணக்கை நீங்கள் விரும்புகின்றவாறு சமர்ப்பிப்பதற்கு வாய்ப்பளிக்கப்படும். அதற்கு தேவையான காலமும் பெற்றுக்கொடுக்கப்படும்.
- உங்களுக்கு மற்றைய தரப்பினரின் பிரச்சனையை செவிமடுப்பதற்கு வாய்ப்பளிக்கப்படும்.
- உங்களுக்காக வேறொருவருமல்ல நீங்களே பேசலாம்.
- இச்செயற்பாடு நடாத்திச் செல்லப்படுவது "மத்தியஸ்தர்கள்" என அழைக்கப்படுகின்ற மூவரைக் கொண்ட சபையொன்றின் மூலம் ஆகும்.

## காரைநகர் பிரதேச செயலக கலாசாரப் பெருவிழாவில் ஆறு பேர்களிற்கு ‘கலைஞானச்சுடர்’ விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் ஆகியவற்றின் அனுசரணையுடன் காரைநகர் பிரதேச செயலகமும் கலாசாரப் பேரவையும், கலாசார அதிகார சபையும் இணைந்து நடாத்திய கலாசார பெருவிழா 10.10.2019 அன்று காரைநகர் இந்துக் கல்லூரி நடராஜா ஞாபகர்த்த மண்டபத்தில் நடைபெற்றிருந்தது.

இந்நிகழ்வில் வடமாகாண கல்வி பண்பாட்டலுவல் -கள் விளையாட்டுதுறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் திரு. இ.இளங்கோவன் மற்றும் உதவிப் பணிப்பாளர் திருமதி சுஜீவா சிவதாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் கலை வளர்ச்சி, வரலாறு, பண்பாடு ஆகியவற்றை மேம்படுத்தும் நோக்கில் செயற்பட்டுவரும் காரைநகரை சேர்ந்த ஆறு நபர்களிற்கு ‘கலைஞானசுடர்’ விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர். அவர்கள் விபரம் வருமாறு:

1. திரு. தம்பிராசா மகாலிங்கம்
2. திரு. வடிவேலு பன்னிருகையன்
3. திரு. வேலுப்பிள்ளை இராசரத்தினம்
4. திரு. S.K சதாசிவம்
5. திரு. சின்னையா தங்கவேலு
6. திரு. இரத்தினம் தர்மராஜா




### திரு தம்பிராசா மகாலிங்கம்

1948 ஆம் ஆண்டு 06 ஆம் மாதம் 13 ஆம் திகதி காரைநகர் வெடியரசன் வீதியில் திரு திருமதி தம்பிராசா சவுந்தலம் தம்பதியருக்கு மகனாகப் பிறந்த இவர், ஆயிலி சிவஞானோதயா வித்தியா -சாலை மற்றும் மெயகண்டான் வித்தியாலையம் ஆகிய பாடசாலைகளில் கல்வி கற்றார்.

18 வயதில் இருந்து பல்வேறு நாடகங்களிலும் தனது பங்களிப்பை ஆற்றி வருகின்ற இவர் வெடியரசன் நாடகத்தில் நான்குதடவைகளுக்கு மேலும் அங்கதன் சபதம் நாடகத்திலும்பல்வேறு பாத்திரங்களை ஏற்று நடித்துள்ளார்.
அதேநேரத்தில் இவர் கடற்தொழிற் சங்கம், வெடிய -ரசன் கலாமன்றம் ஆகிய பொது அமைப்புகளின் நிர்வாகங்களில் பொறுப்புகள் வகித்துச் சமூக சேவை செய்து வருகின்றமையும் குறிப்பிடத்த க்கது.





## திரு. வடிவேலு பன்னிருகையன்

1966 ஆம் ஆண்டு 03 ஆம் மாதம் 19 ஆம் திகதி காரைநகர், வலந்தலையில் திரு திருமதி வடிவேலு சின்னப்பிள்ளை தம்பதியருக்குப் பிறந்த இவர் தனது தந்தையாரிடமிருந்தும் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த சங்கீதபூஷணம் திரு செல்லத்துரை அவர்களிடமிருந்தும் ஹார்மோனியக் கலையையும், பொன்னாலையைச் சேர்ந்த சங்கீதபூஷணம் திரு கணபதிப்பிள்ளை அவர்களிடமிருந்து வாய்ப்பாட்டையும் கற்றுக்கொண்டார்.

கற்கும்போதே பாடசாலைக் கலை நிகழ்வு களிற்கு ஹார்மோனிய இசையை வழங்கிய இவர் 1981 ஆம் ஆண்டில் அரங்கேற்றம் செய்யப்பட்டார். பல்வெறு கலை நிகழ்வுகளிற்கும் ஹார்மோனிய இசையை வழங்கிவந்த இவர், 1983 ஆம் ஆண்டு களபூமி ஞானவைரவர் ஆலயத்தில் மில்க்வைட் நிறுவன அதிபர் திரு கனகராஜ் அவர்களால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

பல மாணவர்களுக்கும் ஹார்மோனியக் கலையைக் கற்பித்துவருகின்ற இவர், 2002 ஆம் ஆண்டில் ஊர்காவற்துறை பிரதேச செயலகத்தினால் **கலைஞானவித்தகர்** என்ற விருதும், 2003ஆம் ஆண்டில் சிவகாமிஅம்மன் தேவஸ்தானத்தினரால் பாராட்டுப் பத்திரமும், 2005ஆம் ஆண்டில் காரைநகர் பிரதேச கலாசாரப் பேரவையினரால் **கலைஞானசுரபி** என்ற விருதும், 2011ஆம் ஆண்டில் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சினால் சான்றிதளும், 2012ஆம் ஆண்டில் நவாலி கதிர்காம முருகன் ஆலையத்தினரால் சிறப்புப் பாராட்டும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

இந் நிலையில் இவரின் வாழ்வில் பேரிடியாக 2012 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதமளவில் உயர் குருதி அமுத்தம் காரணமாக விழிப்புலனை முழுமையாக இழந்தார். ஆனாலும், பார்வையற்ற நிலையிலும் மனம் தளர்ந்துவிடாது தனது கலைப்பயணத்தை ஏனையோரின் ஒத்துழைப்பு டன் தொடர்கின்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும் 2013 ஆம் ஆண்டு தொல்புரம் கலாலயம் நாடக மன்றத்தினரின் குந்தியின் செல்வன் நாடகத்திற்கான இசையமைப்பைச் சிறப்பாக மேற்கொண்டமைக்காக **கலைஞானி** என்ற பட்டம் வழங்கப்பட்டது. இதே ஆண்டு பாரம்பரிய சிறு கைத்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களால் யாழ். கலைத்தூது கலை அரங்கில் வைத்து பொன்னாடை அணிவித்தும், இந்திய துணைத்தூதர் திரு மகாலிங்கம் அவர்களால் விருதும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். 2016 ஆம் ஆண்டு காரைநகர் அத்திபுரக் கந்தசுவாமி ஆலயத்தினரால் **ஹார்மோனிய இசைக்கரப் புயல்** என்னும் சிறப்புப் பட்டம் சூட்டிச் சந்தணமாலை, பதக்கம், பொன்னா டை என்பன அணிவித்துச் சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

இவர் தொடர்ந்து, 2017 ஆம் ஆண்டு மே தினத்தன்று காரைநகர் கங்கைமதி சனசமூக நிலையத்தினரால் பாராட்டுப்பத்திரம் வழங்கி சந்தணமாலை, பொன்னாடை என்பன அணிவித்துக் கௌரவிக்கப்பட்டார். 2018 ஆம் ஆண்டு காரைநகர் வலந்தலை இளையோர் அமைப்பினரால் இவர் கௌரவிக்கப்பட்டார். இவர் இன்றும் பல்வேறு மேடைகளில் தொடர்ச்சியாக தனது ஹார்மோனிய இசைத்திறமையை வெளிப்படுத்தி அனைவரதும் பாராட்டுக்களைப் பெற்று வருகின்றமை காரைநகர் மண்ணுக்குப் பெருமை சேர்க்கும் விடயம் ஒன்று என்றால் அது மிகையில்லை.
இவருக்கு காரைநகர் பிரதேச கலாசாரப் பேரவை கடந்த 10.10.2019 அன்று இடம்பெற்ற பிரதேச கலாசாரப் பெருவிழாவில் **'கலைஞானச்சுடர்'** விருதை வழங்கிக் கௌரவித்ததுடன், யாழ் மாவட்ட கலாசாரப் பேரவை இவ்வாண்டு இடம் பெற்ற மாவட்ட கலாசாரப் பெருவிழாவில் **'யாழ் முத்து'** விருது வழங்கிக் கௌரவித்த மையும் குறிப்பிடத்தக்கது.

## திரு வேலுப்பிள்ளை இராசரத்தினம்

1952 ஆம் ஆண்டு 03 ஆம் மாதம் 17 ஆம் திகதி சுழிபுரத்தில் திரு திருமதி வேலுப்பிள்ளை இலட்சுமி தம்பதியருக்கு மகனாகப் பிறந்த இவர், தற்போது விக்காவில், காரைநகர் என்ற முகவரியில் வசித்து வருகின்றார். இவர் தனது ஆரம்பக் கல்வியை மெய்கண்டான் வித்தியாலையத்தில் கற்றார். சுயமாகக் கற்ற தவில் கலைஞரான இவர் பூதத்தம்பி, பண்டாரவன்னிய ன், வெடியரசன்,



நஞ்சப்பவதம் ஆகிய பல நாடகங் களிலும் பல்வேறு பாத்திரங்களையும் ஏற்று நடித்துள் ளதுடன், இவற்றில் சில நாடகங்கள் பத்திற்கு மேற்பட்ட தடவைகள் யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் மேடையேறியமை குறிப்பிடத்தக்கது. இவருக்கு காரைநகர் பிரதேச கலாசாரப் பேரவை கடந்த 10.10.2019 அன்று இடம்பெற்ற பிரதேச கலாசாரப் பெருவிழாவில் 'கலைஞானச்சுடர் ' விருதை வழங்கிக் கௌரவித்தது.

## திரு. S.K சதாசிவம்



1947 ஆம் ஆண்டு 10 ஆம் மாதம் 02 ஆம் திகதி காரைநகர் இடைப்பிட்டி கிராமத்தில் சட்டத்தரணி திரு சுப்பிரமணியம் கந்தையா அவர்களுக்கும் விசாலாட்சிப்பிள்ளை அம்மையாருக்கும் மகனாகப் பிறந்த இவர், சுப்பிரமணிய வித்தியாலையம் மற்றும் காரைநகர் இந்துக்கல்லூரி ஆகிய பாட-சாலைகளில் கல்வி கற்றதுடன், கொழும்புத் துறை ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் தமிழ் பாட ஆசிர-ியராகப் பயிற்சி பெற்றார்.

நுவரெலியா, குருநாகல் மாவட்டங்களில் ஆசிர-ியராகப் பணியாற்றியதுடன், காரைநகர் சுப்பிரம ணிய வித்தியாசாலையில் அதிபராகவும், கிளிநொ ச்சி கண்டாவளைக் கோட்டத்தின் கோட்டக் கல்வி அதிகாரியாகவும்,வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் வன்னிக்கான இணைப்பாளராகவும், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் செயலாளராகவும், ஜேர்மன் ஒத்துழைப்பு கூட்டுற வகத்தின்(GTZ) பல்வேறு பதவிகளிலும் சேவை யாற்றியுள்ளார்.

இளமையில் காற்பந்தாட்டத்தில் சிறந்த வீரராகத் திகழ்ந்த இவர், பின்னர் விளையாட்டுப் போட்டிகளு க்கான பிரதம பதிவாளராகப் பணியாற்றியுள்ளார். காரைநகரின் அபிவிருத்தி, வரலாறு, பண்பாடு, தொல்லியல் துறைகள் சார்ந்து தொடர்ச்சியான ஆய்வுகளை மேற்கொண்டு வரும் இவர், கோவளம் வெளிச்ச வீடு, காரைநகர் துறைமுகம், நன்னீர் பாதுகாப்பு, கல்வி அபிவிருத்தி, கல்வியா ளர்கள், ஆளுமைகள், மருத்துவ சுகாதார சேவை கள், அமெரிக்க மிசனறியின் பங்களிப்பு, உள்ளூரா ட்சி, நிர்வாகம், தொழிற்பயிற்சி, போக்குவரத்து, விளையாட்டு எனப் பல்வேறு துறைகளிலும் ஆய்வுகளை மேற்கொண்டு கட்டுரைகளை ஆக்கி யுள்ளதுடன், ஆவணப்படுத்தலையும் செய்துவரு கின்றார்.

மேலும், பல்வேறு உள்ளூர், புலம்பெயர் அமைப்பு களின் நிர்வாகங்களில் முக்கிய பொறுப்புகள் வகித்துச் சமூக சேவை செய்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. இவருக்கு காரைநகர் பிரதேச கலாசாரப் பேரவை கடந்த 10.10.2019 அன்று இடம்பெற்ற பிரதேச கலாசாரப் பெருவிழாவில் 'கலைஞானச்சுடர்' விருது வழங்கி கௌரவித்தது.

## திரு சின்னையா தங்கவேலு



1961 ஆம் ஆண்டு 01 ஆம் மாதம் 15 ஆம் திகதி காரைநகர் ஊரி கிராமத்தில் திரு திருமதி சின்னையா சின்னப்பிள்ளை தம்பதியருக்கு மகனாகப் பிறந்த இவர் ஊரி அ.மி.த.க. பாடசாலை மற்றும் காரைநகர் சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலையம் ஆகிய பாடசாலைகளில் கல்வி கற்றார். தனது மாமனார் திரு முருகன் கந்தன் அவர்களிடமிருந்து உடுக்கு வாத்தியக் கலையைக்

கற்றுக்கொண்டார்.

பல்வேறு இசை நிகழ்வுகளிலும் கலந்துகொண்டு பல பாடல்களைப் பாடியுள்ள சிறந்த பாடகரான இவர், தன்னுடையமைத்துணர்திரு கணபதி பசுபதிமற்றும் மகளுடன் இணைந்து காத்தவராயன் சிந்துநடைக் கூத்தைப் பத்துக்கு மேற்பட்ட தடவைகள் ஆற்றுகை செய்துள்ளார். அதேநேரத்தில் காத்தவராயன் சிந்துநடைக் கூத்தைப் இளைஞர்களுக்குப் பழக்கி மூன்று தடவைகள் அரங்கேற்றியுமுள்ளார். யாழ். மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் காவடி, கரகம் போன்றவற்றுக்கு இவர் உடுக்கு அடித்துப் பாடி வருகின்றார்.

இவர் கடற்தொழிற் சங்கம், ஊரி கிராம அபிவிருத்திச் சங்கம், ஊரி அன்னமார் ஆலய நிர்வாகங்களில் முக்கிய பொறுப்புகள் வகித்துச் சமூக சேவை செய்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. இவருக்கு காரைநகர் பிரதேச கலாசாரப் பேரவை கடந்த 10.10.2019 அன்று இடம்பெற்ற பிரதேச கலாசாரப் பெருவிழாவில் **'கலைஞான ச்சுடர்'** விருது வழங்கிக் கௌரவித்தது.

## திரு இரத்தினம் தர்மராஜா



1958 ஆம் ஆண்டு 05 ஆம் மாதம் 31 ஆம் திகதி திரு திருமதி இரத்தினம் மாணிக்கம் தம்பதியருக்கு மகனாகப் பிறந்த இவர், தனது பாடசாலைக் கல்வியையாழ்ற்றன் கல்லூரி மற்றும் காரைநகர் இந்துக் கல்லூரி ஆகியவற்றில் கற்றார்.விக்காவில், காரைநகர் என்ற முகவரியில் வசித்துவருகின்றார்.

பாடகராகவும் வில்லிசைக் கலைஞராகவும் விளங்குகின்ற இவர் சங்கீதபூசணம் கணபதிப் பிள்ளை அவர்களின் நெறியாள்கையில் குமணன் நாடகத்தில் நடித்தார். இந்நாடகம் எட்டுக்கு மேற்பட்ட மேடைகளைக் கண்டமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து வெடியரசன், நஞ்சப்பவதம் ஆகிய பல நாடகங்களிலும் பல்வேறு பாத்திரங்களையும் ஏற்று நடித்துள்ளதுடன், மார்க்கண்டேயர், சகுந்தலை மற்றும் நாயன்மார்களின் வரலாறுகளைக் கூறும் பல்வேறு வில்லிசை நிகழ்வுகளையும் தலை மையேற்று நடாத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவருக்கு காரைநகர் பிரதேச கலாசாரப் பேரவை கடந்த 10.10.2019 அன்று இடம்பெற்ற பிரதேச கலாசாரப் பெருவிழாவில் **'கலைஞான ச்சுடர்'** விருதை வழங்கிக் கௌரவித்தது.

**களபூமி இளைஞர்களின் சிரமதானம் 08.12.2019**

காரைநகரில் பரவி வரும் டெங்கு நோய் பரப்பும் நுளம்புகளின் பரவலை தடுக்கும் நோக்கில் களபூமி சனசமூகநிலையம், களபூமி விளையாட்டுக்கழகம், இந்து இளைஞர், விளானை சனசமூக நிலையம், சுந்தரமூர்த்திநாயனார் வித்தியாசாலை பழைய மாணவர் சங்கம், திக்கரை கிராம அபிவிருத்திச் சங்கம் மற்றும் களபூமி கல்வி அபிவிருத்திக் கழகம் என்பன இணைந்து 08.12.2019 அன்று சிரமதான பணி மூலம் வீதியோரங்களை துப்பரவாக்கும் பணியில் ஈடுபட்டனர்.





**www.karainews.com**

## வியாவில் சைவ வித்தியாலயத்தில் பயன்தரு மரக்கன்றுகள் வழங்கப்பட்டன!

வியாவில் சைவ வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவர்களிற்கும் ஆசிரியர்களிற்கும் பயன்தரு மரக்கன்றுகள் 29.11.2019 வழங்கப்பட்டது. காரைநகர் பலகாட்டை சேர்ந்தவர்களும் தற்போது இலண்டனில் வசிப்பவர்களுமான திரு,திருமதி சிவசம்பு சிவரா‌ா, சிவராசா குணமாலா ஆகியோரின் அனுசரணையில் இப்பயன்தரு மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.







## சிவகௌரி சனசமூக இளைஞர்களின் சிரமதானம்

09.12.2019 அன்று சிவகௌரி சனசமூக இளைஞர்களினால் சிவகௌரி ஐக்கிய முன்னேற்ற சங்கத்தின் நன்னீர் கிணற்றின் வளாகம் சிரமதானம் மூலம் சுத்தமாக்கப்பட்டது. அத்துடன் சிவகௌரி முன்பள்ளி மற்றும் அத்திபுர கந்தன் ஆலயத்திலும் பூமரங்கள் நாட்டப்பட்டு சிரமதானம் மூலம் மேற்கொள்ளப்பட்டது.









## பேரம்பலம் முன்பள்ளியில் நடைபெற்ற குழந்தைகள் தினம் 09.12.2019

அமரர் பேரம்பலம் அவர்களின் 18வது நினைவும், அமரர் நல்லதம்பி அவர்களின் 20வது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு திரு.செல்லன் நல்லதம்பி அவர்களது குடும்பத்தின் அனுசரணை யுடன் மேற்படி தினம் அனுஷ்டிக்கப்பட்டது.







# ஜேர்மனி காரைநகர் ஒன்றியத்தின் கோடைகால ஒன்றுகூடல் 24.11.2019

காரைநகர் ஒன்றியம் ஜெர்மனியின் கோடைகால ஒன்றுகூடல் 24.11.2019 அன்று ஒன்றியத்தின் தலைவர் திரு. சங்கரப்பிள்ளை ரவீந்திரன் தலைமையில் Landwehr Str.19, 59192 Bergkamen, Germany என்னும் இடத்தில் நடைபெற்றது. காரைநகரில் மூத்த கல்விமான்களில் ஒருவரான மறைந்த வித்துவான் திரு. முருகேசு ஐயா அவர்களின் மகன் திரு. சிவநேசன் அவர்களதுபாரியார் மங்கள விளக்கை ஏற்றி வைத்தார். அதனைத் தொடர்ந்து செயலாளர் திரு. நடராசா சண்முகலிங்கம் அவர்கள் கடவுள் வாழ்த்து பாடிய பின்னர் நீத்தோருக்கான அஞ்சலி செலுத்தப்பட்டது.







செயலாளர் வரவேற்புரை ஆற்றி நிகழ்ச்சி நிரலை அறிவித்தார், செயலாளர் தனது உரையில் காரைநகர் மக்களின் அபிவிருத்தியில் ஜேர்மன் காரை ஒன்றியம் கட்டம் கட்டமாகவே பங்கு கொள்ள முடியும் எனவும் நீண்டகாலத் திட்டங்களில் பங்கேற்பது தற்சமயம் சாத்தியமற்றது எனவும் காரை ஒன்றியத்தின் வளர்ச்சியிலேயே காரைநகர் மக்களிற்கான நலத்திட்டங்கள் சார்ந்துள்ளதாகவும் தெரிவித்தார். ஒன்றியத்தினைப் பதிவு செய்வது தொடர்பாக தனது ஆலோசனைகளையும் அடுத்த வருடம் மிகப்பெரியளவில் ஒரு கலைநிகழ்ச்சியை ஏற்பாடு செய்வதற்கான முன்மொழிவையும் வைத்திருந்தார்.

தொடர்ந்து தலைவர் திரு. ரவீந்திரன் அவர்கள் தனது உரையில் ஒன்றியத்தின் எதிர்காலத்த திட்டங்களை வகுப்பதற்கு முன்னர் திட்டங்களை செயற்படுத்துவதற்கான நிதி ஓரளவு திரட்டப்பட்ட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்,

அத்துடன் எமது சகோதர அமைப்புக்க ளுடனான நட்பு ரீதியிலான உறவினை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்றும், அவர்களுடனான சந்திப்புக்கள் ஊடாக பல செயற் திட்டங்களை முன்னெடுப்பதற்கான ஆலோசனைகளையும் அனுபவரீதியிலான கருத்துக்களை உள்வாங்கலாம் என்றும், ஒன்றியத்தின் இளையோர் அமைப்பு உருவாக்கம் அவர்களு டைய திறமைகளை வெளிக்கொணரல் என்றவகையில் அடுத்த வருடம் ஏற்பாடு செய்யவுள்ள கலைவிழாவிற்கு இளையோர்களையும் உள்வாங்கி ஒரு விழா ஏற்பாட்டுக்குழுவைஅமைக்க இருப்பதாகவும் இந்த வருடம் 31.03.2019 இல் ஆரம்பிக்கப்பட்ட காரை ஒன்றியம் இதுவரை எதுவிதமான செயற்திட்டங் களையும் ஆரம்பிக்காவிட்டாலும் ஒன்பது மாத காலத்தில் மூன்று தடவை ஒன்றுகூடல்களை ஏற்பாடு செய்து பல புதிய அங்கத்தவர்களை உள்வாங்கி உள்ளதாகவும், இந்த மூன்று ஒன்றுகூடல்களும் ஒன்றியத்தின் சட்டப்படியான பதிவு சார்ந்து மிகவும்

அவசியமானதும் என்றும் குறிப்பிட்டிருந்தார்.
அடுத்து பொருளாளர் தனது இன்று வரையிலான





வரவு செலவுக்கு கணக்கினை மக்கள் முன் வாசித்திக் காட்டியதுடன் இந்த வருடத்திற்கான மாதாந்த சந்தாவினையும் விரும்பிக்கொடுத்த வர்களைப் பாராட்டிப்பெற்றுக்கொண்டார்.

தொடர்ந்து உரையாற்றிய ஒன்றியத்தின் உபதலை -வர் திரு அன்னலிங்கம் அவர்கள் சில வாரங்க ளுக்கு முன்னர் காரைநகரில் அவர் கேட்டறிந்த காரைநகர் வளர்ச்சி சம்பந்தமான விடையங்களை பகிர்கையில் காரைநகர் மக்களிற்குப் பல தேவைகள் இருப்பதாகவும் குறிப்பாக காரைநகரில் பாடசாலைகளில் பல குறைபாடுகள் இருப்பதாகவும் காரைநகர் ஆதார வைத்தியசாலையின் அபிவிருத்தி பற்றித் தான் காரைநகர் அபிவிருத்திச் சபையின் தலைவருடன் உரையாடியதாகவும் குறிப்பிட்டார்.

அடுத்து காரைநகர் ஒன்றியம் ஜெர்மனி தனது வளர்ச்சிப்பாதையில் சகோதர காரை மன்றங்களு டனும் காரைநகர் அபிவிருத்திச்சபையுடனும் நெருங்கிய உறவுகளை பேணி காரைநகரின் வளர்ச்சிக்கு அமைவாகச் செயற்படவேண்டும் எனவும் தனிப்பட்ட விரோதங்கள் ஒதுக்கி வைக்கப்பட்டு சகோதர மன்றங்களுக்கிடையிலான உறவுகளை பேணுவதே காரைநகர் மக்களை வளர்ச்சிக்கு அவசியமானது. சகோதர மன்றங்களு க்குள் ஏற்படும் கருத்து வேறுபாடுகளில் அவசிய மற்றது. பிரித்தானியாவில் உருவாக்கப்பட்டுள்ள களபூமி ஒன்றியம் பிரித்தானியா எனும் அமைப்பு புலம்பெயர்ந்த நாடுகளில் ஏற்கனவே இயங்கி வரும் காரைநகர் மக்களிற்கான அமைப்புக்க ளிற்கு எதிராக உருவாக்கப்பட்டதல்ல, பிரித்தானிய களபூமி மக்கள் காரைநகரில் தங்களின் சேவை-களை நிறைவேற்றுவதற்கு இலகுவாகவே இந்த அமைப்பை உருவாக்கியிருக்கின்றார்கள். இதனால் காரைநகர் மக்களின் அபிவிருத்தி எந்த விதத்திலும் பாதிக்கப்போவதில்லை.மாறாக காரை-நகர் மென்மேலும் வளர்ச்சிப்பாதையில் செல்லும்.களபூமி ஒன்றியம் பிரித்தானியாவு டனான நட்புறவையும் காரை ஒன்றியம் ஜெர்மனி பேணிக்கொள்வது அவசியம் என்றும் இதைத் தனது தனிப்பட்ட கருத்தாகவும் வேண்டுகோளா கவும் விடுப்பதாகவும் திரு. விஜயரட்ணம் அருள்முகன்சாயிபாபா அவர்கள் தனது உரையில் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து வருகைதந்திருந்த பலரும் தங்கள் கருத்துக்களை பகிர்ந்துகொண்டதுடன் பல ஆலோசனைகளையும் வழங்கியிருந்தனர்

இறுதியாக 2020 ம் ஆண்டில் 1. காரை ஒன்றியம் ஜெர்மனி பதிவு செய்தல். 2. இளையோர் அமைப்பு உருவாக்கம். 3. அமைப்பிற்கான வங்கிக்கணக்கு ஆரம்பம். 4. கலைவிழா ஏற்பாடு கலைவிழாவில் இளையோர்களின் திறமைகளை வெளிக்கொணரல். 5. கலைவி ழாவில் சகோதர மன்றங்களின் நிகழ்வுகளை உள்வாங்குதல். 6. சகோதர மன்றங்களின் உறுப்பினர்கள் சேவையா ளர்களை ஜெர்மனியில் கௌரவித்தல் எனப்பல தீர்மானங்கள் ஒருமித்த கருத்தாக ஏற்றுக்கொள்ளப்பட்டன .தொடர்ந்து மதிய உணவு விருந்துடன் ஒன்றுகூடல் இனிதாக நிறைவேற-ியது .



## காரைநகர் பிரதேச வைத்தியசாலையில் தொடரும் நடைமுறை சீர்கேடுகள்




காரைநகர் பிரதேச வைத்தியசாலையில் நிலவும் குறைபாடுகளை நிவர்த்திசெய்வதில் வைத்தியசாலை நிர்வாகம் அசமந்தப் போக்கைக் கடைப்பிடித்து வருவதாக ஊர் மக்கள் தெரிவித்து வருகின்றனர். இவ்வருட நடுப்பகுதியில் அதிகாலை வேளையில் முட்டு வருத்தம் காரணமாக வைத்தியசாலைக்கு நோயாளியை கொண்டு சென்ற போது வைத்தியசாலை திறந்திருந்த போதிலும் எவருமே கடமையில் இருக்கவில்லை என்பதுடன் இரவு நேர பாதுகாவலரும் கடமையில் இருக்கவில்லை யென்பது கண்டறியப்பட்டது. இந்த நிலையில் நோ யாளர்களுக்கு மருந்து சுற்றிக் கொடுக்கும் காகிதாதிகளுக்கு மேல் குட்டைநாய் ஒன்று படுத்திருந்த விடயம் 04.12.2019 பெரும் பூதாகரமானது.

இந்த விடயம் கண்டுபிடிக்கப்பட்டமையை காரைநகர் பிரதேச வைத்தியசாலையில் சுகாதார நடைமுறைகள் தொடக்கம் நோயாளர்களுக்கான பொது ஒழுங்கு வரை பல்வேறு குறைபாடுகள் நிலவி வருகின்றன. இவை தொடர்பாக பொதுமக்கள் மற்றும் நோயாளிகள் தரப்பில் பல தடவைகள் சுட்டிக்காட்டப்பட்ட போதிலும் அவற்றை நிவர்த்திசெய்ய இதுவரை வைத்தியசாலை நிர்வாகம் நடவடிக்கை எடுக்கவில்லை.

நோயாளர்கள் மற்றும் வைத்தியசாலைப் பணியாளர்கள் பயன்படுத்தும் மலசலகூடங்கள் சுகாதார முறையில் சுத்தம் செய்யப்படுவதில்லை. சுத்தம் செய்யப் பயன்படுத்தப்படும் திராகவங்கள் போத்தல்களுடன் அடிக்கடி காணாமற்போகின்றன எனத் ஊழியர்களே தெரிவித்துள்ளதாக தெரியவருகின்றது. மேலும், சுகாதாரமான முறையில் பாதுகாக்கப்படவேண்டிய பொருட்கள் நிலத்தில் வைக்கப்பட்டுள்ளன. நோயாளர்களுக்கு மருந்துகள் சுற்றிக்கொடுக்கும் காகிதாதிகள் அடங்கிய பொதி உரிய முறையில் பாதுகாக்கப் படவில்லை. பாதுகாப்பற்ற அறை ஒன்றில் வைக்கப்பட்டிருந்த அந்தக் காகிதாதிகளுக்கு மேல் குட்டை நாய்கள் படுத்துறங்கும் நிலை காணப்படுகின்றது.

இவ்வாறு குட்டைநாய் படுத்திருந்தமை அவதானிக்கப்பட்டதைத் தொடர்ந்து வைத்தியசாலையில் குழப்பம் ஏற்பட்டது. பொதுமக்களுக்கு மருந்து சுற்றிக்கொடுக்கும் காதிதாதிகளுக்கு மேல் இவ்வாறு நாய் படுத்திருப்பது பெரும் சுகாதாரக் குறைபாடு என்பதை சிலர் சுட்டிக்காட்டியதை அவதானிக்க முடிந்தது.

இதேவேளை, இங்கு சிகிச்சைக்காகக் செல்லும் நோயாளர்களை மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லவேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்படும்போது நோயாளர் காவு வண்டிக்கு சாரதி இல்லை என வைத்தியசாலைத் தரப்பினால் தங்களுக்கு கூறப்படுகின்றது என பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். ஆனால் மன்னாரைச் சேர்ந்த ஒருவர் இந்த வைத்தியசாலையில் சாரதியாக நியமிக்கப்பட்டு அர்ப்பணிப்புடன் பணியாற்றி வருகின்றார். இந்நிலையில் சாரதி இல்லை என வைத்தியசாலைத் தரப்பினர் கூறுவது ஏன் எனவும் மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

காரைநகர் பிரதேச வைத்தியசாலையில் நிலவும் இவ்வாறான குறைபாடுகளை நிவர்த்திசெய்ய யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என பொதுமக்கள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



**காரைநகர் செய்திகள் உடனுக்குடன் தினம் தினம் பார்த்து அறிந்து கொள்ள**

**www.karainews.com**

**இணையத்தளத்திற்கு வருகை தாருங்கள். செய்திகள், செய்திகளிற்கு அப்பால் உள்ள உண்மைகள் விபரமாகவும் விளக்கமாகவும் எடுத்து வருவதில் ‘எனது ஊர் காரைநகர்” எப்போதும் முன்னணியில்!**

## சடையாளி கேணி புனரமைப்பு கடன்பாக்கி ஒன்றரை இலட்சம் ரூபாய்கள் வழங்கப்பட்டது

2015ம் ஆண்டு மீளபுனரமைக்கப்பட்ட சடையாளி கேணியின் கடன் பாக்கி ஒன்றரை இலட்சம் ரூபாய்கள் செலுத்தப்பட வேண்டியுள்ளதாக காரைநகர் அபிவிருத்தி சபையின் ஊடாக திரு.வே.முருகமூர்த்தி அவர்கள் எழுத்து மூலமாக அறியப்படுத்தியிருந்தார். அதனையடுத்து கடந்த 4 வருடங்களாக செலுத்தப்படாதிருந்த ஒன்றரை இலட்சம் ரூபாய்கள் கடன் பாக்கி காரைநகர் அபிவிருத்தி சபையினருக்கு www.karainews.com ஊடாக சேர்த்து 30.08.2019 அன்று அனுப்பி வைக்கப்பட்டது.

மேலும் இவ்வாண்டு சடையாளி கேணியினை இறைத்து சுத்தமாக்கவும், சிவன்கோயில் பூந்தோட்ட குளம் மேலும் ஆழமாக்கவும் 50,000 ரூபாய்கள் காரைநகர் அபிவிருத்தி சபைக்கு வழங்கப்படுகின்றது. இதன் மூலம் காரைநகர் மண்ணின் சேவையாளர் திரு.வே.சபாலிங்கம் மற்றும் திரு.வேலாயுதபிள்ளை செல்வராசா ஆகியோரின் முயற்சியினால் 29.09.2019 அன்று சடையாளி கேணி இறைத்து சுத்தமாக்கப்பட்டுள்ளதுடன், சிவன்கோயில் மூன்றாம் வீதி தாமரைக்குளம், சடையாளி சின்ன கேணி என்பனவும் இறைத்து சுத்தமாக்கப்பட்டதுடன் பூந்தோட்ட குளம் மேலும் ஆழமாக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இதற்கான நிதியினை காரை நியூஸ் ணையத்தளம் ஊடாக வழங்க முன்வந்தவர்கள் வருமாறு:

திரு.பாலசுப்பிரமணியம் மகாதேவன் ($500) 68,500
திருமதி.சுந்தரேஸ்வரி சச்சிதானந்தன் ($150) 20,550
திரு.சிவசுப்பிரமணியம் சிவராமலிங்கம் ($100) 13,700
திரு.நமசிவாயம் அம்பலவாணர் Rs 5,000
திரு.தீசன் திரவியநாதன் Rs 42,250
**மொத்தம்** Rs 150,000 ரூபாய்கள் காரைநகர் அபிவிருத்தி சபை வங்கி கணக்கிற்கு 30.08.2019 அன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸ்சில் இருந்து மேற்படி தேவைக்காக ரூபா 50,000 ரூபாய்கள் வழங்குவதாக ஒப்புக்கொண்ட போதிலும் இதுவரை வழங்க முன்வராத காரணத்தினால் காரை நியூஸ் இணையத்தளம் மேலும் 50,000 ரூபாய்களை காரைநகர் அபிவிருத்தி சபையினருக்கு வழங்கவுள்ளது.










# கனடா காரை கலாசார மன்றத்தின் 'காரை வசந்தம் 2019'

கனடா காரை கலாசார மன்றத்தின் 'காரை வசந்தம் 2019' கனடா ஸ்காபுரோவில் 13.10.2019 அன்று வெகு விமர்சையாக நடைபெற்றது. கனடா வாழ் காரைநகர் மக்களின் கலை கலாசார பின்னணிகளை கருத்தில் கொண்டு நடாத்தப்படும் இக்கலைவிழாவானது வருடந்தோறும் இலையுதிர் காலத்தில் கனடா வாழ் காரை சிறார்களின் கலைலப்படைப்புக்களோடு மேடையேற்றப்படும் விழாவாகும். இவ்வருடம் திரு. சிவசுப்பிரமணியம் சிவராமலிங்கம் தலைமையிலான நிர்வாக சபையினரால் இவ்விழாவிற்கான திட்டமிடலின் போது இந்நிகழ்வு மூலம் பெறப்படும் நிதியானது காரைநகரில் கல்வி பயிலும் மாணவர்களது கற்றல் கற்பித்தல் தேவைகளை உடனடியாக நிவர்த்தி செய்யும் பொருட்டு நடாத்துவது என தீர்மானிக்கப்பட்டு நடாத்தப்பட்டது. அதன் அடிப்படையில் 5 திட்டங்களை நடைமுறைப்படுத்துவது என நிர்வாக சபையினரால் தீர்மானிக்கப்பட்டன. அவையாவன:

**1.** காரைநகர் பாடசாலைகளில் கல்வி கற்கும் தரம் 10 மாணவர்கள் சாதாரண தர பொதுப்பரீட்சைக்கு தயாராகும் வகையில் கல்விக்கருத்தரங்கு நடாத்துவதற்கு பாடசாலை அதிபர் ஆசிரியர்களினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையினை ஏற்று அதனை இவ்வருடம் முதல் ஆரம்பித்து வைப்பது எனவும் இதன் மூலம் காரை இந்துக் கல்லூரி, யாழ்ற்ரன் கல்லூரி, சுந்தரமூர்த்திநாயனார் வித்தியாலயம், வியாவில் சைவ வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கல்வி கற்றும் தரம் 10 மாணவர்கள் நூற்றுக்கு மேற்பட்டோர் பயனடைவார்கள்.

**2.** யாழ்ற்ரன் கல்லூரியில் விஞ்ஞான பீடத்தில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர் ஒருவரின் திடீர் இடமாற்றத்தை தொடர்ந்து யாழ்ற்ரன் கல்லூரியில் ஏற்பட்டுள்ள விஞ்ஞானபீட ஆசிரியர் பற்றாக்குறையினை நீக்க தற்காலிகமாக அடுத்து வரும் 6 மாதங்களிற்கு தகுதியான ஆசிரியர் ஒருவரை நியமிக்க அதற்கு தேவையான வேதனத்தை வழக்க தீர்மானிக்கப்பட்டது.

**3.** களபூமி சுந்தரமூர்த்திநாயனார் வித்தியாசாலை அதிபரின் வேண்டுகோளிற்கு இணங்க மற்றைய பாடசாலைகளில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் smart class room திட்டத்தினை அமுல்படுத்த கோரப்பட்ட 3 இலட்சம் ரூபாய்களை வழங்குவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

**4.** காரைநகர் பாடசாலைகளில் ஏற்பட்டுள்ள நிழல் பிரதிகள்(photo copy) எடுப்பதற்கான தேவைகள் அதிகரித்துள்ள காரணத்தினால் ஒரு சில பாடசாலை களில் உள்ள நிழல் பிரதி இயந்திரங்கள் கூடிய விரைவில் பழுதடைவதாலும் அனைத்து பாடசாலைகளின் ஆசிரியர்களும் தமது கற்கை தேவைகளிற் காக பயன்படுத்தும் நோக்கில் நீண்டகால பாவனைக்குட்பட்ட நிழல் பிரதி இயத்திரத்தை பெற்று காரைநகர் அபிவிருத்தி சபை காரியா லயத்தில் வைப்பதன் மூலம் அனைத்து பாடசாலை ஆசிரியர்களும் பயனடைவார்கள் என்னும் நோக்கில் 3 இலட்சம் ரூபாய்கள் வரையான நிதி ஒதுக்கப்பட்டும், அதற்குரிய காகிதாதிகளை கிரமமாக காரைநகர் அபிவிருத்தி சபை வழங்க மேலும் வருடம் ஒன்றிற்கு ஒரு இலட்சம் ரூபாய்கள் வழங்குவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

**5.** காரைநகர் அபிவிருத்தி சபை மாணவர் நூலகத்திற்கு பாடசாலை மாணவர்களிற்கு தேவையான பயிற்சி புத்தகங்களை பெற்றுக்கொள்ள அடுத்த வருட ஆரம்பத்தில் புதிதாக அறிமுகப்படுத்தப்படவுள்ள கல்வி திட்டத்தின் பிரகாரம் விற்பனைக்கு வரவுள்ள பயிற்சி புத்தகங்களை பெற்றுக்கொள்ள ஒரு இலட்சம் ரூபாய்கள் வழங்குவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

'காரை வசந்தம் 2019' நிகழ்வுகளிற்கு தாயகத்திலிருந்து காரைநகர் அபிவிருத்தி சபையின் தலைவர் திரு.இராமநாதர் சிவசுப்பிரமணியம் அவர்களும், சிறப்பு அதிதியாக காரைநகர் பிரதேச சபை உபதவிசாளரும் முன்னாள் காரைநகர் அபிவிருத்தி சபை பொருளாளருமான திரு.கணேசபிள்ளை பாலச்சந்திரன் அவர்களும் கலந்து கொண்டிருந்தனர். மேலும் காரை வசந்தம் 2019 புகைப்படங்களை அட்டை பக்கத்திலும் பார்வையிடலாம்.




கனடா காரை கலாசார மன்ற தலைவர் திரு.சிவசுப்பிரமணியம் சிவராமலிங்கம், செயலாளர் திரு.ஆறுமுகம் சின்னத்தம்பி



# கனடா காரை கலாசார மன்றம் 'காரை வசந்தம் 2019' காட்சிகள்



























Sell your home for top dollars
Buy Your Home For Less $$$
•FREE home market evaluation
•Free home staging
•Professional photo & virtual tour
•Just listed & sold flyer distribution
•Social media marketing
•Install sale & directions sings
•Email / e-flyers & weekly advertising
•Weekly open house
#1
RE/MAX
OUTSTANDING AGENT FOR OUTSTANDING RESULTS
RE/MAX
Excel Realty Ltd., Brokerage
independently owned and operated
Bus: 905-475-4750
Fax: 905-475-4770
50 Acadia Ave #120, Markham, ON L3R 0B3
Honest, Knowledgeable & Professional Service
in Your Neighborhoods Full Time Realtor
Raj Nadarajah
Sales Representative
Dir: 416-333-6115
nanohomes@gmail.com